Registered No. 1514] [April 1927.

676



# செங்குந்த மித்திரன்.

SENGUNTHA MITHRAN

உள்ளுறை


| | |
|---|---|
| கைக்கோளரும் பெயரும் | ௧௧௬ |
| முயற்சியும் கடமையும் | ௧௨௭ |
| பயமெனும் பேய் | [illegible] |
| நெசவுத் தொழில் | ௧௩௩ |
| சுகஜீவனம் | ௧௩௬ |
| முன்னேற்ற வழி | ௧௩௯ |
| குடியால் விளையும் கேடு | ௧௪௧ |
| ஒழுக்கம் உயர்வு | ௧௪௭ |
| காஞ்சி மகாநாடு | ௧௫௦ |
| காந்தியடிகள் நல்லுரை | ௧௫௬ |


ஆசிரியர்

காஞ்சி நாகலிங்க முனிவர்

பிரபவ௵ சித்திரை மீ

1927.



[illegible] ublisher:—T. N. Sapapath[illegible]

## ஆசிரியருரை

௧. செங்குந்தகுலமக்கள் தோற்றிய கால வரையறை இது என ஆராய்ந்தறிதற்குப் பல நூற்சான்றுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலான துணைக்கருவிகள் மிகுதியாக வேண்டப்படுகிறது. சூரபன்மராதியர் அரசு புரிந்த காலம் என்று கூறி விடுவது எளிதாகவே முடியும். படிப்பாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து முதன் முதல் செங்குந்தர் சரித்திரத் திரட்டு ஒன்று காணவேண்டும்.

௨. செங்குந்தகுலமக்கள் பலர் வரலாற்று முறையில் வந்தநல்லாசிரியரிடம் படித்துணர்ந்து அவர்களால் கொடுக்கப்பெற்ற பட்டாபிதானத்துடன் விளங்கக் காண்கின்றேமேயன்றிப் புலவர் கூட்டம் என்று ஒருகூட்டம் தனியாக வழங்கயாண்டும் காண்கின்றேமல்லேம். இஃதொரு புதிய செங்குந்தர் பிரிவு போலும். இன்னும் செங்குந்த குலமக்கள் ஒன்பது பிரிவுபடுவர் என்று கூறுவாருமுண்டு. பிரமாணமின்றி அந் நன்மக்கள் கூட்டத்தை இப்படியெல்லாம் பிளவு படுத்தல் நகைப்புக் கிடமாகுமென்க.

௩. செங்குந்தகுலமக்கள் திரண்ட கூட்டத்தின் இடையில் ஒத்த கிழவனும் ஒத்த கிழவியும் மணவினையடைந்து சற்புத்திரர்களைப் பெறுவர். இப் புத்திரர்கள் தங்களைப் பெற்ற தாய் தகப்பன் பெயர்களையே மந்திரமாகச் சொல்லுவர். பொருள் வருவாய்கொண்டு புணராது புணரும் பொதுமகளிர் வயிற்றில் வந்த மக்கட் சாதியர் தாம் போஷகராகக் கொண்டிருக்கும் ஒருவனையே குறித்துப் பிரிவு காண வேண்டும். அது செங்குந்த குலமாகுமா?

௪. செங்குந்தகுலமக்கள் காஞ்சி மகாநாட்டைத் தங்கள் தலைநாடாகக்கொண்டு இப் பரந்த உலகத்தில் அங்கங்கே கூட்டங் கூட்டமாக வசித்து வருகிறார்கள். இவர்களைத் தற்போது ஒன்றாகத் திரட்டுவது அவசியந்தான். அது எற்றுக்கென்னில், இக்கால நாகரீகம் பெற்று முன்னுக்கு வரவேண்டி என விடுக்க.

இனிச் செங்குந்த மித்திரன், கடிதங்களிற் கண்ட விஷயங்களுக்கெல்லாம் சமயம் வாய்க்கும்போது தனித்தனி ஆராய்ச்சிகொண்டு பிரமாணங்களுடன் சமாதானம் எழுதிக்கொண்டு வருவன். அன்றியும், செங்குந்த குலமக்கள் நடத்திக்காட்டிய நியாயத்தல [illegible] பத்திரம் தொடர்ச்சியாக மொழி பெயர்க்கப்பட்டு வரவும் [illegible]மென்க.

---

8X32

"உருத்திரகணிகையரைச் சிவாலயங்களில் அமைக்கு மாறு வேதங்களில் விதித்திருக்கிறது" என்ற கதைக்கு ஆதாரம் எந்த வேதத்தில் காணப்படுகிறது. வேதம் வேதம் என்று சொல்லுவதெல்லாம் அப்பாஷையை யறியாத மக்களை வஞ்சிக்க வேண்டிய உபாயமேயாகும். ஆகமங்களிலும் புராணங்களிலும் எடுத்துக்கூறப்படும் உருத்திரகணிகையர் எல்லாம் உண்மைச் செங்குந்த குலமக்கள் வழிவந்த பெண்மக்கள் என்று தானு காணப்படுகிறது?

சி. கு. நா. முதலியார் அவர்கள் கடைசியாக இவ்வுருத்திர கணிகையர் மரபிலே தான்...........பரவைநாச்சியாரும்,.......... திருப்பூவணம் பொன்னனையாளும், திருவண்ணுமலை...........தேவதாசியும்,...........கீதையின் முதலாவதத்தியாயத்தை உபதேசிக்கச் செய்து நற்கதியி லுய்வித்த உருத்திரகணிகையும், சிலம்பி அஞ்சனுட்சி, வல்லி, கோம்மச்சி முதலிய...........பல உருத்திர கணிகையர்களும் அவதரித்தருளியது" என்று கூறி மகிழ்ந்தனர்.

இங்கே முதன்மையாகக் குறித்த பரவைநாச்சியார் பதியிலார்குலம் என்றும், மற்றையவர் வேசிகளென்றும் தெரியவருகிறதேயன்றி மற்றப்படி வேறென்றும் சி. கு. நா. முதலியார் கொண்ட தம் நினைவுப்படி விளங்கவில்லையே?

இங்ஙனம் தங்கள்,

**T. அமிர்த முதலியார்,**

முட்டம், நாகப்பட்டணம் தாலூக்கா.

குறிப்பு:—இந்த சி. கு. நா.முதலியார் எழுதி வெளியிட்டிருக்கும் நூல்களையெல்லாம் செங்குந்த குலமக்கள் அகத்தியமாக ஆராய்ந்து உண்மை காணவேண்டிய தொருதலையாம். இனி, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஏற்படுத்திய பூர்விகந்த பரிபாலன கூட்டத்து அறிவாளிகளால் ஆராய்ந்து எழுதப்பட்டு வரும் செங்குந்த குல சரித்திரத்திரட்டு, ஒட்டக்கூத்தர் மான்மியம், திருப்புகழார் விஜயம், (திருப்புகழார் அருணகிரிநாதர்) இரட்டையர் சரித்திரம் முதலான நூல்களில் செவ்வையாக மேற்கண்ட குப்பைகளை யெல்லாம் களைய வேண்டற்பாலதுமாம்.—ஆசிரியர்.

---



நவவீரர் வம்சம் நிச்சயித்த சுவாமிகளுக்கு பரிசுகொடுத்துத் தீராதென்று இரட்டை விளக்கும் இடங்கைப் பாவாடையிட்டு வெண்கால் பீடத்தெழுந்தருளச்செய்து பரிமள புட்பங்களால் பதார்ச்சனைபண்ணி சைபோகமாய் தரிக்கொருபணம் தலைக்கட்டுக் கொருபணம் நன்மைக் கொருபணம் தீமைக் கொருபணம் இந்தப்படி நாலு பணமும் வருத்தனையாக எந்த மண்டலத்திலுள்ள எந்த கைக்கோள துரைகளும் பாவாடை வரிசை யுபசாரஞ் செய்யவும் இந்தச் செப்பேடு தள்ளி யுதாசினமும் ஆக்ஷேபமுஞ் செய்யக்கூடாது இந்தக்கட்டளை சந்திராதித்தியருள்ள வரைக்கும் தப்பாது இந்தக்கட்டளை தள்ளி யுதாசினை யாக்ஷேபம் பண்ணின பேர்களுக்கு சிவசத்தி சண்முகன் பாதத்தாணை சிவசமையம் செங்குந்த நாட்டாராணைப்படி மகா பாதகனுய் ரௌரவாதி நரகங்களை யடைவார்க ளென்றுஞ் சத்தியமாய் எழுபத்திரெண்டு நாட்டிலுள்ள செங்குந்தரனைவரும் ஏகாம்பரனுத சுவாமி சன்னிதானத்தில் நரைசிங்கராயர் முன்பாக ஞானப் பிரகாச சுவாமியாரவர்களுக்கு தாம்பிரசாசனம் பண்ணிக்கொடுத்தோம் இதற்கறியும் சாதியார் சோழமண்டலத்துள்ள பூமி பாலகரும் வாதாவியைத் திறைகொண்ட வன்னியரும் இவர்களறிய பொதுக் கையொப்பம் செங்குந்தம் உ கந்தவேள் துணை உ என்பது.—**சேப்புப்பட்டயம்.**

எனவரும் அக் கந்தபுராணம் அரங்கேற்றிய காலப் பாயிரச் செய்யுள் ஒன்றினுலும் பட்டயத்தாலும் உணரப்படும்.

இக் கந்தபுராணம், சோணுட்டுப் படை வீட்டின் தமிழ்த் தெய்வமாகிய திருவேரகச் சாமிநாதக் கடவுள் அடியெடுத்துக் கொடுத்த "இந்துவார்சடை" என்னும் விநாயகக் காப்புச் செய்யுள் வழியாகப் பாடிய தென்ப. அதனை,—

"இன்ன வாறுசொ லென்றெனை யெந்தைவேள்
சொன்ன வாறிது சொற்றன மாதலால்
உன்னு மாயினு மொண்டமி ழோர்களுக்
கென்ன வாறு வியம்புவ தியாமெனு"

என வரும் அப் புராணத்து அவையடக்கச் செய்யுள் ஒன்றினுல் உய்த்துணரப்படும்.

அப் புராணம் பாலகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம் என்னும் முப் பகுதியை யுடையது. வடமொழியில் உள்ளபடியே ஒவ்வொரு சரித்திரத்தையும் விடாமல் படலப்பெயருடன் விளக்கமாகக் கூறுவது. உள்ளுக்குள் பாவினங்களெல்லாம் அமைய

சந்தச்சுவை பல மிகுதியாகச் சொட்டச் சொட்ட நல்ல நடையில் **ஆறாயிரம்** செய்யுட்களால் யாக்கப்பட்டுத் தமிழ் மக்களுக்குப் பாராயணப் பயனைக் கிடைக்கப்பெற்றது.

இப் பெரு நூல், மிக முயன்று பொருட் செலவு பலமுறை செய்து கடைசியாக நெடுங்காடு **ஸ்ரீ** நடேச தேசிகர் இடமிருந்து அரசாங்கவழி கிடைத்த ஏடு ஒன்று கொண்டு அவர்கள் கடிதப் பிரதியுடன் நம்மால் ஒத்திட்டு அச்சுக்குச் செப்பஞ்செய்து வருகிறது. பிரதி வைத்திருப்பவர்கள் இந்தச் சமயம் அனுப்பிக் கொடுத்தால் மிக்க உபகாரமாயிருக்குமென்க.

செங்குந்த குலமக்கள் முன்னேற்றங்கருதிப் பொருளாலும், வாக்காலும், காயத்தாலும் மிக முயன்று உழைத்து வரும் நமது **ஆப்தர் ஸ்ரீமான் தி. நா. சபாபதிமுதலியார்** அவர்கள் இப் புராண ஏடு கிடைக்க எடுத்துக்கொண்ட உழைப்பை நாம் என்றென்றும் மறவேமல்லேம். இவர்கள் கைத் தொகைப்பொருள் உபகாரங் கொண்டே இச் **செங்குந்த மித்திரன்** தொடங்கலாயிற்று என்பது ஒவ்வொரு செங்குந்த குல மக்களும் தங்கள் தங்கள் மனத்துள் வைத்துப் போற்றற்பால தொன்றும். குல ஊக்கங்கொண்டு இரவு பகலாக உழைத்துப் போதரும் இவர்கள் நன்முயற்சிக்கு ஒரு சிறிதும் மனந் தளராது உற்சாகப்படுத்திவரும் அவர்கள் தமையனார் கல்வி கேள்வியினால் **ஆன்ற ஸ்ரீமான் தி. க. ச. கலியாண சுந்தர முதலியார்** அவர்கள் உதார குணமும் பெரிதும் வியக்கத்தக்கதாகும்.

இம் முறையில் செங்குந்த குல மக்களுள் பொருளாட்சி கொண்ட ஒரு சிலராவது தங்கள் குல முன்னேற்றம் கருதி வெளி வந்தால் இவை போன்ற எத்தனையோ நற்காரியங்களை எளிதில் முடித்துக் கொள்ளக்கூடுமல்லவா? இனி அந்தப்படி நடக்கும் என்பது சில நற்குறிகளால் எதிர் பார்க்கப்படுகிறது. இது நிற்க.

இரண்டாவதாகத் தென் மொழியில் சிவரகசிய கண்டத்தை மொழிபெயர்த்துக் கொண்டு அதனிலுள்ள சப்த காண்டத்தின் முன்னூறு காண்டத்தைக் காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார் அவர்கள் **கந்தபுராணம்** எனப் **பன்னீராயிரம்** செய்யுளால் பாடியருளினர். அதனை,—

"அந்தப்புரமு மறுநான்கு கோட்டகத் தாரு மொன்றாய்க்
கந்தப்பு ராணம் பன்னீராயி ரஞ்சொன்ன கச்சியப்பர்

OFFICE OF ... MADRAS
14 JUL 1927

உ

முருகன்றுணை

# செங்குந்த மித்திரன்

[ஆசிரியர்: காஞ்சி நாகலிங்க முனிவர்]

மாதப் பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

தொகுதி - க | பிரபவ௵ ஆனிமீ | பகுதி - ௬

வேலுமயிலுந்துணை

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராவம ராவதி காவலனே.

## கைக்கோளரும் கல்வெட்டுகளும்

### அநுவாதம்

கைக்கோளர் என்னும் செங்குந்த குலமக்கள் முற்பட்ட காலத்தில் தமிழ் மன்னராகிய சேர சோழ பாண்டிய மூவேந்தரால் வரிசைபல தந்து நன்கு போற்றப்பட்டு வந்தனர். இவர்கள் அக்காலத்தில் கல்வி, கேள்வி, நாகரிகம், ஒழுக்கம், செல்வம், கொடை, வீரம் முதலாயவற்றில் மேம்பாடுற்றிருந்தமை பண்டைய பல கல்வெட்டுகளால் நன்கு காணக்கிடக்கிறது. இவர்களுள்ளே பெரும்பான்மையோர் இராச ராசாங்கத்தில் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், மந்திரிகளாகவும், சேனாபதிகளாகவும், போர் செய்யும் வீரர்களாகவும் இருந்ததாக இக்கால ஆராய்ச்சியுடைய

208435



மேன்மக்கள் பலரும் தாங்கள் எழுதிய சரித்திரப் பகுதியுள் செவ்வையாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். அக் குறிப்பினுள் ஒன்றான மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் “செந்தமிழ்” முதற்பகுதி:—

“கி. பி. 850-880, நூற்றாண்டில் காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த பல்லவராஜன் காலத்திலே செங்குந்தர் என்னும் மரபினர், குறுநில மன்னராகவும், படைத் தலைவராகவும் ஏற்பட்டு மிகுந்த செல்வராய் இருந்தார். கரிகாற் சோழன் பண்டு வேளாளரைத் தமிழருக்குள்ளே முதன்மையாக வைத்ததுபோல, பல்லவராஜன் செங்குந்தருக்கும் முதலியார் என்றுபெயர் கொடுத்திருந்தான்.....

ஈட்டி யெழுபது

இந்திரன் அயன்மால் தேவர் யாவர்க்கும் முதன்மையாக
வந்த பான்மையினால் சூல மழுப்படை யத்தனுர்க்கு
முந்தியநாமந் தானும் முதலியர் ஆகையாற் செங்
குந்தர் சந்ததிக்கும் அப்பேர் முதலியர் என்று கூறும்.

மேலும் தியாகராஜர் பூஜிக்கப்படும் விடங்கம் என்று பெயர் பெற்ற ஏழு ஸ்தலங்களிலும், மாகாளம் என்று வழங்கும் ஏழு ஸ்தலங்களிலும், வேறு சிவாலயங்களிலும் செங்குந்தர் தர்மம கர்த்தராய்ப் பரிபாலனம் செய்துவந்தார்.......

ஈட்டி யெழுபது

விடங்கமேழ் ஆதி வீதி விடங்கம் ஆரூர் வெண் காடு
நடங்கொளும் தில்லைமூதூர் பஞ்சநன் னதிசாய்க் காடும்
இடங்கொள்மா காளம் ஏழும் இடைமருதூர் செங்காடும்
தொடங்கிய தரும ஆட்சி செங்குந்தர் தொகுதி வாழி.

தென்னாட்டிலே கடற்கரையில் உள்ள திருச்செந்தூருக்கும் கப்பலின் மேற் சென்று அவ்வூரில் இருந்த சுபன் என்னும் செங்குந்தனைத் துணையாகக்கொண்டு, தங்களது இராஜாதிராஜனாகிய சோழனுக்குப் பகைவனான ஈழநாட்டரசனை ஒரு நாளிலே வென்று அங்குள்ள பொருள்களைத் திரையாகக்கொண்டுவந்தார். செங்குந்த வீரர்.......

ஈட்டி யெழுபது

ஆழ நீள் கடற்கும் ஆங்கோர் அம்பிமேல் சென்றே அப்பால்
சூழ் திருச்செந்தூர் உற்ற சுபனென்பான் துணையாக்கொண்டு
வாழ் இராசாதிராஜ மன்னவன் மருவ லான்றன்
ஈழநா டொருநாள் தன்னில் திரைகொண்டு ஈண்டுற்ற குந்தம்.



பின்னும் ஆதித்த சோழனோடு மாறுபட்டு நெடுநாள் அகப்படாதிருந்த வல்லான் என்னும் அரசனைக் கொல்வதற்குச் செங்குந்தர்களிலே தலைவராகிய பழுவூர் வீரன், பழுவைநாராயணன், கச்சித்தனியன், ஒற்றியூரன், களத்தூராரசன், புற்றிடங்கொண்டான், கோளாந்தகன், புலியூர்ப்பள்ளிகொண்டான், பிணவன், கண்டியூரன், முதுகுன்றமணியன், தஞ்சை வேம்பன் என்னும் பன்னிருவருஞ் சென்றார். தங்களிலே ஒருவரேனும் போரிலே படுவாரெனில் மற்றவரும் இறக்கக் கடவேம் என்று ஒரு சூள் செய்துகொண்டார். வீரச்செருக்கினையுடைய இப் பன்னிருவரும், வல்லானைத் தொடர்ந்து பலநாட் செய்த போரிலே பதின்மர் இறந்துபோக, வீரன் நாராயணன் என்னும் இருவர் கையிலே அகப்பட்டான் போரிலே மிக்க வல்லவனாகிய வல்லான். உடனே அவனுடைய அழகிய மனைவி முன்தானையேந்தி அவ்விருவர் காலிலும் வீழ்ந்து தனது தாலியைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று இரந்தாள். அதுகண்டு வெற்றியடைந்த செங்குந்தர் இருவரும் அவளுடைய கற்பை வியந்து மகிழ்ச்சியோடும் அவள் கணவனைக் கொல்லாது விட்டுவிட்டார். அப்புறம் அவ்விருவரும் சோழராஜனிடஞ் சென்று நடந்த வரலாற்றை அறிக்கையிட்டு உள்ளம் சற்றேனுங் கலங்காது தங் தலைகளை அரிந்துவைத்துச் சபதத்தை நிறைவேற்றித் தமது பேராண்மையை என்றுந் துலங்க வைத்தார்.

ஈட்டி யெழுபது

வல்லான்தன் திருத்தேவி மாங்கலியம்
பிழையாமல் மடிதான் ஏற்றிங்
கெல்லோரு மாங்கலியப் பிட்சையிடும்
எனத்தாள்வீழ்ந்து இரப்ப வேண்டிக்
கொல்லாமல் விடுதல்புகழ் எனக்கருதியோ
கற்பின் கொண்ட வாய்மை
நல்லார்கள் இருந்தவையில் புகழ்கைக்கோ
காத்ததுகொல் நம்செங் குந்தம்.

எல்லாக்காலத்திலும் ஒன்று ஏற்பவர்க்கு இல்லையெனும்
சொல்லினது கற்றும் சொல்லறியார் எந்துகுந்தம்
வல்லானைக் கொல்லாமல் மனைவிக்கு மாங்கலியம்
உல்லாசத் துடனளிக்கும் உதவியதொன்று அறிந்தேமால்,

முத்தமிழ் இராசரா சேந்திரன் முன்னமே
சுத்த வீரத்திறந் துலங்குதற்கு ஒரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெறுதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே." என்று கூறுகின்றது.

## முதலியர் சரிதை

பண்டு கரிகாற் சோழன் (ஆதொண்டன்) கச்சியிற் காடு வெட்டி நகரம் கண்டபோது குடிகளாகக் கங்கைக்கரை யிருந்தாரை அழைத்து வந்து தொண்டைமண்டலப் பெயருடன் வேளாளருக்கு முதலியர் பட்டம் கொடுத்து வரிசை பல தந்தது போலவே, முசுமுகச் சோழன் அருந்தவம் பெரும்பகல் தள்ளிக் கந்தமாதனத்திருந்த வீரவாகு தேவர் முதலாய இலக்கத்தொன்பதின்மர்களை முருகக்கடவுள் கொடுப்ப அழைத்துவந்து சோணாட்டுக் கருவூரில் அம் மண்டலப் பெயருடன் செங்குந்தருக்கு முதலியர் பட்டம் கொடுத்து வரிசை பல தந்து போற்றிவந்தான் என்று "ஸ்ரீ காமகோட்டி மடாலய வம்சாவளி" விளக்கமாகக் கூறும்.

## வல்லான் சரிதை

விக்கலன் என்னும் பெயரிய வல்லான் வடநாட்டிலே நல்லூர் என்னும் பட்டினத்திலிருந்த போகன் என்னும் இரட்டனுக்குப் பிறந்தவன். சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் பலபகல் செய்து அரிய வரங்களைப் பெற்றவன். ஊர்கடோறும் யாத்திரை செய்து கடைசியாகத் தென்னாட்டிலே கடம்பூர் வந்து வீராணத் தேரி மத்தியில் ஆழ்ந்தகன்ற இருப்புத் தம்பம் நாட்டி அதன் மேல் கட்டிய கோட்டையில் வசித்தவன். மக்களுக்கும் மற்றைய உயிர்களுக்கும் நாடோறுந் துன்பத்தையே செய்தவன். பராந்தகன் ஆட்சிக்கு அஞ்சாத நெஞ்சமுடையவன். அனங்கவல்லி என்னும் கற்புக்கரசியை மணமகளாகப் பெற்றவன்.

இவனைப் போரிலே வென்று வாகைமாலை சூடப் பராந்தகன் பலநாள் முயன்று வந்தான். ஆனால் அவ்வினை முற்றுப் பெறவில்லை. அதன் பின்னர் பராந்தகன் முதன் மந்திரியாகிய தஞ்சை வேம்பன, பழுவூர் வீரன், நாராயணன் முதலிய போர் வீரரைக் கூட்டிக்கொண்டு பராந்தகன் சபையில் வல்லானை வென்று வருவதாகச் சூள் உரைத்தனன். பராந்தகன் அவ்வண்ணமே வல்லானைப் போரிலே வென்றுவரத் தஞ்சைவேம்பனுக்கு அநுமதி கொடுத்தனுப்பினன். போர்க்கோலம் கொண்டு புறப்பட்ட செங்குந்த வீரர் பன்னிருவரும் "தங்களுக்குள்ளே யாரேனும் ஒருவர் போரில் இறந்துபடின் மற்றையரும் உயிர் வாழ்வதில்லை" என்று உறுதிப்பாடு செய்துகொண்டனர்.



பின்னர் அச் செங்குந்தவீரர் பன்னிருவருள் கச்சித்தனியன் துர்க்காதேவிக்கும், ஒற்றியூரன் காளிசா தேவிக்கும் தாமே பலியாயினர். முதுகுன்றமணியனும் கோளாந்தகனும் தாமே உயிர்நீங்கி ஏரியகழியைக் கடக்கும் தெப்பக்கருவியாயினர். புற்றிடங்கொண்டான் செந்நாய்களுக்கும், களந்தையான் புலிக்கூட்டங்களுக்கும் புலியூர்ப் பள்ளிகொண்டான் சிங்கங்களுக்கும் துணிந்து ஆகாரமாயினா. பிணவன் தன் உயிரைவிட்டு மற்றவர் அக்கினியாற்றைக் கடந்து செல்லத் தெப்பமாயினன். கண்டியூரன் ஏரியிலுள்ள முதலைகட்குத் தனது மாமிசம் உணவாகவும், அவ்வேரியை மற்றையோர் நீந்திக்கடந்து செல்லத் தோல் துருத்தியாகவும் உபயோகப்பட உயிர்துறந்தான். தஞ்சை வேம்பன் வழுவழுப்பான தம்பத்தில் மணலும் இரத்தமும் கலந்து பூசி எஞ்சிய இருவர் ஏறிச் செல்லத் துணிந்து உயிரைக் கொடுத்தான். பழுவை வீரன் நாராயணன் என்னும் வீரமக்கள் இருவரும் அத் தம்பத்தின்மேலேறிக் கோட்டையுட் சென்று வல்லான் மார்பை யிடமாகக் கொண்டு வாளைக் கையிலே கொண்டார்கள். அப்போது வல்லான் யாதாமொரு செயலுமின்றி வாளாவிருந்தனன்.

வல்லான் மனைவியாகிய அனங்கவல்லித் தாயார் வீரன் நாராயணன் என்னும் செங்குந்த வீரரைப் பார்த்து, "மாங்கலியப் பிச்சை தந்தருளவேண்டும்" என்று தனது முன்றானையை கையிற்கொண்டு நின்றனள். அதுகண்ட வீரநாராயணர் இருவரும் அவ்வம்மையாருக்கு மாங்கலியப்பிச்சை கொடுத்துதவி வல்லானை அவன் பிறந்த ஊருக்குப் போம்படி வாயாரவாழ்த்தி வழி அனுப்பினர். அதன் பின்னர் ஜெயங்கொண்ட வீரன் நாராயணன் இருவரும் வல்லான் கோட்டையை நெருப்புக் கிரையாக்கி அங்கிருந்து நேரே பராந்தகன் திமன்றம்வந்து சேர்ந்தனர்.

மன்றத்தெழுந்த பராந்தகன் வீரநாராயணரைப் பார்த்து, "வல்லான் தலையை எவ்வாறு வெட்டி வீழ்த்தினீர்" என்று

கேட்ட உடனே அவ் வீரர் இருவரும் "இவ்வாறுதான் வெட்டினேம்" என்று முன் உறுதிப்படி தங்கள் தலைகளை வெட்டிச் சபையில் வீழ்த்தினர். அப்போது பராந்தகன் திடுக்கிட்டு "இப்பழி நம்மையே சாரும் ஆதலால் நாம் நம்முயிரைப் போக்கிக்கொள்ளுவதே பிராயச் சித்தமாம்" என்று தனக்குள்ளே நினைத்துத் தன் உடைவாளைக் கையிலே யெடுத்தான். அத்தறுவாயில் முருகக் கடவுள் பராந்தகன் முன் எழுந்தருளி "மன்னவனே, உன்னுற் சரீரம் நீங்கி உயிர்விட்டவர்கள் பிழைப்பார்கள், நீ சிறிதும் அச்சுறாதே" என்று கூறிப் பரவெளியில் மறைந்தனர். அவ்வாறே மெய்த்தலை கொடுத்த வீரர் இருவரும் அதற்கு முன்னிறந்தவீரர் பதின்மரும் உயிர்பெற்று வந்தார்கள். இதுகண்ட பராந்தகன் அச் செங்குந்தவீரர் பன்னிருவருக்கும் வரிசை பல தந்து அவரவர் ஊருக்குப் போம்படி சிவிகையில் அனுப்புவித்தான். வீரர்களும் தங்கள் தங்கள் நாட்டைச் சென்றடைந்தனர்.

குறிப்பு:—இச் சரிதையிற் கண்ட வீராணத்தேரி மஞ்சட்குப்பம் ஜில்லாவில் உள்ளது. இந்த ஏரியில் இப்போதும் வல்லான் திடர் என்று ஒரு மேடு காணப்படுகிறது. ஏரியின் தென் கோடியில் உள்ள லால்பேட்டை முதலிய இடங்களில் இச் சரித்திர சம்பந்தமான உண்மைக் குறிப்புக்கள் கோயின் மூலமாகப்பல காணப்படுகின்றன. லால்பேட்டைக்கு மேற்கேயுள்ள மன்னார்குடி வீரநாராயணர் ஞாபகார்த்தம் பராந்தகனால் கண்டது என்பது ஒரு கல்வெட்டின் உள்ளீடு. கல்வெட்டு நல்ல நிலைமையில் இல்லை. இம் மன்னார்குடி வீர நாராயணபுரம் என்று வழங்குவதைக் கவனித்து ஆராயவேண்டும்.

## கல்வெட்டுகள்

பழைய காலத்துக் கல்வெட்டுகளுள் விசையாலயன், பராந்தகன், கோப்பரகேசரி, இராசேந்திரன், இராசராசன், சுந்தரசோழன், திரிபுவனதேவன், வீரராசேந்திரன், குலோத்துங்கன், விக்கிரமசோழன், இராச நாராயணன், வீரசம்பன்னன், அகபாயன், அபயகுலசேகரன், கோப்பெருஞ்சிங்கன், சுந்தரபாண்டியன், வல்லாளதேவன், வாணதராயன் முதலிய அரசர்களது அரும்பெறற் செய்திகள் எழுதப்பட்டுள்ள இடங்கள்தோறும் கைக்கோளக் குல மக்கள் பெரும்புகழ் குறிப்பிடாத இடங்களே கிடையா.



திருவண்ணமலையில் இறைவன் கோயிலாகிய அண்ணமலையுடைய நாயனர் திருத்தளியில் வல்லாள தேவரால் எடுப்பித்த காளி கோபுரத்தின் தென் பாகத்தில் வெட்டப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில் கைக்கோளக் குல மக்களுக்கு வலங்கை வரிசைகள் முற்றும் காணப்பட்டுள்ள முறையை ஆராயுந்தோறும் அவர்கள் முற்காலத்திருந்த செல்வப் பெருக்கின் பெருமிதம் உண்மையில் விளக்கமாகத் தோன்றும்.

க. சுவஸ்திஸ்ரீ ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரர் மதுராய விபாடங் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராயர் மூவராதிபதி ஸ்ரீவீரதேவராயர் குமாரர் ஸ்ரீவீரவிஜய பூபதிராய உடையார் பிரதிவிராஜ்யம் பண்ணியருளா நின்ற ஸகாப்தம். ௲ஙூ௱சய ன் மேற் செல்லா நின்ற விளம்பி வருஷத்து தனு நாயற்று பூர்வ பக்ஷத்து தஸமியும் புதன்கிழமையும் பெற்ற ரேவதி நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்குன்றக்கோட்டத்து பெண்ணை வடகரை வாண்கோப்பாடி அண்ணநாட்டுத் தனியூர் திருவண்ணமலைக்கு இடங்கை வலங்கை இல்லை திருவண்ணமலையில் இரண்டு தெருவில் கைக்கோளர்க்கு முன்பு பூர்வம் நடந்து போந்த சங்கு தண்டு ஆனை சாமரம் மற்றும் வலங்கைக்கு உள்ள வரிசைகளெல்லாம் சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும் இந்த காரியத்துக்கு அழிவு செய்தவன் சிவத்துரோகியும் இராசத்துராகியும் ஆகக்கடவாணகவும்.

குறிப்பு:—இக் கல்வெட்டில் கைக்கோளக் குலமக்கள் 'வலங்கை வரிசைகள்' முற்றும் பழையபடி ஸ்ரீவீரதேவராயர் குமாரர் ஸ்ரீவீரவிஜய பூபதிராய உடையார் அவர்களால் கொடுக்கப் பெற்றதாகத் தெரியவருகிறது. இவ் வரிசைகள் எல்லாம் பாரம்பரியமாகக் கைக்கோளக் குலமக்கள் திருவண்ணமலையில் பெற்றிருந்து இடையில் அவ் வரிசைகள் பலவும் இழந்தமைக்குக் காரணம் ஆராய்ந்தறிய வேண்டும். இக் கல்வெட்டின் காலம் கி.பி.409.

இனி, குறித்த சரித்திரங்கொண்டும் கல்வெட்டுகொண்டும் கைக்கோளக் குலமக்கள் வீணே மனப்பால் குடித்திருக்கலாகாது. கைக்கோளக் குலமக்களுள் சிறுபான்மையோர் பழைய மேன்மையை அடைந்திருந்தாலும், அவருள் பெரும்பாலோர் அம்மேன்மையை அடைய இக்காலத்தில் முற்படவேண்டும். கல்வி கேள்வி

செல்வம் வீரம் ஊக்கம் ஒழுக்கம் கொடை முதலியவை இருந்தாற்றான் மற்றைய நாகரிக வகுப்பாரோடு சேர்ந்து வாழ இடமுண்டாகும். ஒவ்வொரு வகுப்பிலும் இந்த ஏற்றத் தாழ்வு இருக்கத்தான் செய்யும் என்பது உண்மையானாலும் அது கைக்கோளக் குலமக்கள் முன்னேற்றத்திற்குச் சமாதானமாகாது. நாம் 'பிரசாரம்' செய்து வந்த ஜில்லாக்களுள் ஒரு சில இடங்களில் தொகுப்பாக வசித்து வரும் கைக்கோளக் குலமக்கள் ஆசாரம் மிகவும் பரிதாபத்திற்கே இடமாயிருக்கிறது. பெரிய நகரங்களில் மற்றைய வகுப்பாரோடு சேர்ந்து தனித்தனி வசித்துவரும் அவர்கள் ஆசாரம் உண்மையில் நன்றாகத்தான் இருக்கிறது. சிறிய சிறிய கிராமங்களுள்ளும் சில கிராமங்களில் கைக்கோளக் குலமக்கள் ஆசாரம் அவ்வளவு கெடுதலாகச் சொல்ல முடியாது. இதற்குக் காரணம் கல்வி, கேள்விகளென்றே சொல்லவேண்டும். பொதுவாகச் செங்குந்தர் ஆசாரம் பண்டைய வழக்கப்படி பல பல வகையில் மிக விரிந்து கிடக்கின்றன. அவ்வாசாரங்களெல்லாம் ஒருங்கே இந்நாகரிக காலத்தில் சிறிதும் பொருத்தமடைய மாட்டாது. தென்னாட்டிலுள்ள வகுப்பார் பலரும் முன்னேற்றமே கண்ணாகக் கொண்டு, திருந்தி வருகின்றனர். கைக்கோளக் குலமக்கள் மட்டும் இக்காலக் கிளர்ச்சியில் தங்கள் மனத்தைத் திருப்பாமலிருப்பது இன்னும் கீழ்ப்போவதற்கே வழியாய்விடும். இதைக் கைக்கோளக் குலமக்களுள் படித்துணர்ந்த அறிவாளரும் செல்வவந்தரும் மனத்தில் வாங்கி தங்கள் நிலைமையை மற்றைய செங்குந்த சகோதரரும் அடைய முயன்று வேலை செய்து வரவேண்டும்.

இத் திருத்த வேலையைக் கைக்கோளக் குலக் குரவர்கள் செய்துவர ஒவ்வொரு கிராம நாட்டாண்மை காரியம் பெரியதனம் முதலியவர்கள் ஏற்பாடு செய்யலாம். வீணில் ஏன் இக்குரவர்களுக்கு வருஷவருஷம் பாதக்காணிக்கையும் பட்டணப்பிரவேசமும் நடத்தவேண்டும். சிஷ்ய ஜனங்கள் அறிவுள்ள வகை செய்வது அக் குரவர்கள் கடமை அல்லவா? இப்படிச் செய்து வைக்க அக் குரவர்களுக்குக் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் வேண்டும். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அநுபவம் இல்லாதவர்கள் குறவர்களென்றே சொல்லவேண்டும். இந்த விஷயத்தை இன்னும் அடுத்த கல்வெட்டுகளின் கீழ் விளங்க எழுதப்படும்.



# காலத்தினருமை

காலமென்பது நாம் நன்றாய் யோசிக்குமிடத்தில் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் மிக்க விலையுள்ளதாயிருக்கிறது. பொன் வெள்ளி நவமணி முதலியவை வேண்டுமென்றாலும் நாம் தக்க பொருள் கொடுத்து விலைக்கு வாங்கலாம்; நமக்கு கடவுள் கருணையால் அளவிட்டிருக்கும் கால அளவல்லாமல் வேறு ஒருகண்ணிமைப் பொழுதாவது கோடிகோடியாகப் பணங்கொடுத்தாலும் கிடைக்குமா? அல்லது நாம் வீணே கழித்த காலத்துக்காகப் பின்னே துக்கித்தாலும் பெரும்பொருள் செலவழித்தாலும் அது மீண்டும் வருமா?

> "தேடிக் கொளும்பொருளைச் சிக்கெனவே கைப்பிடித்துக்
> கோடிக் கொருநிமிஷங் கொள்ளுகினுங்—கூடாத
> வாணாளை வீணுக்கு மானிடரைப் போன்மயக்கம்
> பூணார்மெய் கண்டுதுறப் போர்."

என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். இவ்வளவு அருமையான காலத்தை நாம் எவ்வளவு சிக்கனமாய்ச் செலவழிக்க வேண்டும். பொருள் முதலியவற்றை நாம் சிக்கனமாய்க் கையாள்வது ஓர் பெருங்காரியம் அல்ல; ஏனென்றால் நாம் அவற்றை உதாரமாய்ச் செலவிட்டாலும் மறுபடியும் சம்பாதித்துக் கொள்ளலாம்; காலத்தை அவ்வாறு மீட்டும் சம்பாதிப்பது கூடாமை. மேலும் மாதாந்தம் பத்துரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் நாடோறும் இவ்வளவு செலவழித்தால் மாதத்துக்கிவ்வளவு ஆகும் என்றும், மிகுதி இவ்வளவு நிற்கும் என்றும் கணக்கிட்டறிந்து, அதற்குத் தக்கவாறு சிக்கனமாய்ப் பொருளைச் செலவிட்டு வரலாம். நமக்குக் கடவுள் வரையறுத்திருக்கும் ஆயுட்காலம் இவ்வளவென்று நமக்குத் தெரியாது. அது இன்றைக்கோ, நாளைக்கோ, ஒரு மாதத்துக்குப் பின்னோ, ஒருவருடம் கழிந்த பிறகோ, பத்துவருடஞ்சென்றோ, மற்றெப்போதோ முடியும். அதை நிச்சயித்துக் கூற எவர்க்கும் கூடாத காரியமாயிருத்தலால், இவ்வளவு உள்ளதென்று அறிதற்குக் கூடாததாயுள்ள அருமையான காலத்தின் அதி நுட்ப பாகத்தையும் நாம் எவ்வளவு சிக்கனமாய்ப் போற்றிக் கையாளல் வேண்டும். ஒரு நிமிஷநேரந்தானே யென்று அலட்சியமாயெண்ணி வீண்போகலாமா? "பலதுளி பெருவெள்ளம்" என்னும் பழமொழி

போல், நாள்தோறும் நாம் வறிதே கழிக்கும் கால நுட்பமாகிய நிமிஷநேரங்களை வருஷ முடிவில் கணக்கிட்டுப் பார்ப்போமானால் அவை பல நாளாகும் என்பதற்குச் சந்தேகம் என்ன? சிறிய பல அணுக்கள் ஒன்று சேர்ந்தல்லவா ஒரு பெரிய மலையாகிறது. ஆகாயத்தை யளாவிய ஒரு பெரியமாளிகை ஒரு கல்லின்மேல் மற்றொருகல் சேர்ந்தன்றோ அவ்வாறாயிற்று. நாம் அலட்சிய பாவஞ் செய்து நிஷ்பிரயோசனமாய்க் கழிக்கும் கால நுட்பங்கள் ஒன்று சேர்ந்தால் பல நாளாகும் என்னும் விஷயத்தை நாம் கூர்ந்து யோசித்துப் பார்த்தால் ஒரு நிமிஷ நேரத்தையும் வீணிற்போக்க நமக்கு மனந்துணியுமா? வீண்போக்கிய இறந்த காலத்தைப்பற்றி நெஞ்சம் இரங்காமலிருக்குமா? சிந்தித்துப் பாராத தோஷத்தால் நிமிஷ காலங்கள் மிகவற்பமாகத் தோன்றுகின்றனவே யன்றி வேறல்ல. ஒரு சிலர் காலத்தின் அருமைப்பாட்டைச் சிறிதேனும் சிந்தியாதவர்களாய், நமக்கிருக்கும் காலத்தில் ஒரு நிமிஷநேரமும் வீண்போகாதபடி பிரயோசனப்படுத்தி வந்தாலும் நமது காரியங்களுக்குச் சற்றேனும் போதாதே என்னும் மனக்குறையின்றி, ஐயோ! பொழுது போகவில்லையே யென்று மனவருத்தப் படுகிறார்கள். இதைப் பார்க்கிலும் பேதமை வேறொன்றுண்டா? இக் காலத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வயது நூறையும் ஒருவன் புண்ணியவசத்தால் பூரணமாய்ப் பெறுவானேயானாலும் நித்திரையிற் பாதி கழிந்துபோகிறது. எஞ்சியுள்ள ஆண்டு ஐம்பதில் அறியாமைப் பருவமாகிய பாலியத்தில் ஏறக்குறைய பதினைந்து வயதும், பிணியிலும்,பசியிலும்,மூப்புப்பருவத்திலும் மிகுதியான காலமும் வீணே கழிந்து போகிறது. இடையிலுள்ளது அதி சொற்ப காலந்தானே? அதில் ஒரு கண்ணிமைப் போதையாவது விருதாவாய்க் கழிக்கலாமா?

"வேதநூல் பிராய நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே."

என்று ஆழ்வார் கூறியிருப்பது மெய்யன்றோ? சிலர் தாம் அத்தியாவசியமாய்ச் செய்து சீக்கிரத்தில் முடிக்க வேண்டிய காரியத்தை முன் வைத்துக்கொண்டே அதைத் தொடங்குவதற்குத் தங்கட்கு அவகாச மில்லையென்றும், நாளைக்குப் பார்ப்போம்



என்று ஒவ்வொரு நாளாய்க்கழித்துக்கொண்டும், ஒன்றுஞ்செய்யாமல் சோம்பிக் காலங்கழித்துக் கடைசியில் அதை முடிக்காமலே மனவருத்த முறுகிறார்கள்.

"சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்."

என்று நமது ஔவைப் பெருமாட்டியார் கூறியது இவர்களைப் பற்றியன்றோ? சிலர் நமது வாணாள் ஐயோ! அதிசொற்பமா யிருக்கிறதே என்று வாசா கயிங்கரியமாய்ப் பேசுவது மாத்திரமே யல்லாமல், நடப்பது சாஸ்வதமென் றெண்ணியது போலேதான். நமக்குத் தேக திடமும் மனோ பலமும் இருக்கும் காலத்திலேயே வயோதிக பருவத்துக்கு வேண்டியவைகளை யெல்லாம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்; அப்போது பார்த்துக் கொள்ளலாம், இப்போது உண்டு உடுத்துக் கண்டு களித்துச் சுகமாய் வாழலாம் என்று மனம் போனபடி யெல்லாம் நடந்து காலத்தை வீணே கழித்தல் தக்கதன்று.

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை."

"நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்."

என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். சிலர் தாம் வயதில் மூத்தமைக்காக மிகவும் சந்தோஷிக்கின்றனரே யன்றி அந்தோ நமக்குக் கடவுள் வரையறுத்திருக்கும் வாணாளில் இத்தனை வருடங்கள் வீணே கழிந்து விட்டனவே யென்றும், இனி யிருப்பது அதிசொற்பகாலந்தானே யென்றும், அச்சொற்பகாலத்தில் நம் கடவுள் திருவடியை அடைதற் கேதுவான காரியங்களை எவ்வாறு செய்து முடிக்கப்போகிறோ மென்றும் சிறிதேனும் மனக்கவலை யுறுகிறதில்லை. காலமென்பது நாம் விநோதமாய்ப் போக்கி மகிழும்படித் தன்னை ஒருநாள் போல மயக்கிக்காட்டி நம்முடலை யறுக்கும் வாள் போல் இருக்கின்றது. இதனைக் கூர்ந்து யோசிக்கவல்ல பேரறிவுடையோர்கள் நாள் கழிவுக்காகச் சந்தோஷியார்கள். நாள் கழிவை நமன்குறுகல் என்றே நிச்சயித்திருப்பார்கள்.

"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்."

என்று தெய்வப்புலவரும் செப்பியுள்ளார். ஆகையால், நாம் காலத்தை அலட்சியமாய் எண்ணி விருதாவாய்க் கழிக்காமல், மரண

தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் தனக்கது நடப்பதற்கு முன்னுள்ள காலத்தின் ஒவ்வொரு நிமிஷ நேரத்தையும் எப்படி அருமை பாராட்டி நடந்து கொள்வானே அதுபோல் எண்ணி உபயோகப்படுத்தி ஒழுகவேண்டும்.

குறிப்பு:— இக்கட்டுரை எடுத்துக்கூறும்விஷயம் பாரமார்த்திகமாயினும் விவகாரத்தில் அம் முறையை அனுட்டிப்பது நன்மை பயக்குமென்பது செங்குந்த குலமக்கள் அறியற் பாலதொன்றும்.

---

# ஆட்டைக்கடன்

ஆட்டைக்கடன் என்பது வடமொழியில் சிரார்த்தம் சிராரத்தம் என்று வழங்கப்படுகிறது. இதன்பொருள். சிர-மேலான, அர்த்தம் - பொருள்; அதாவது உயர்ந்த பலனைத் தருவது என்பதாம். அல்லது சிர - சிரத்தை யுடையோர்களால், அர்த்தம்- அடையும் பெரும் புண்ணியப்பொருள் என்பதுமாம்.

ஆட்டைக்கடன் நல்லுடம்பு நல்வாழ்வு நல்லிடம் நன்மனை நன்மக்களைத் தருந் தகுதி யுடையது. இச் செய்கையினை உலகில் பல வேறு ஜாதி மதப் பிரிவினரும் தத்தமக்கியன்றவாறு செய்து வருவதாகவும் புலனாகின்றது. இச் செய்கையினைக் கவனித்தால் செய்நன்றி யறிதலாக விளங்குவதால், ஜாதி மதம் வயசு இடம் காலம் ஆதியபேதங்களைக் கருதாது யாவரும் செய்தே தீரவேண்டுமென்று ஏற்படுகின்றது. அன்றியும், தமிழர் ஆரியர் என்னும் பாகுபாடு இக் கிரியையில் பாராட்டுவது நன்றன்று. தம்மால் வணங்கத்தக்க கல்வி அறிவு ஆசார முதலியன வாய்க்கப்பெற்ற மூவரையாவது இருவரையாவது ஒருவரையாவது முதனாளிலேயே சொல்லி யழைத்துவந்து எண்ணெயிட்டு நீராட்டி இயன்ற வஸ்திர முதலி உயர்ந்த ஆசனத்திருத்தி சுகந்தபுஷ்பங்கள் அணிந்து பாத பூசை செய்து கற்பூர ஆரத்தி செய்து வாழ்த்தி வணங்கி அருகிருந்து இன்னின்னவைகளை அருந்தினால் நன்றுமென்றுரைத்து இனியமொழி கூறி நன்னீருதவி விசிறி உண்டு வெறுக்கும்படி ஆமைவடை மோர்க்குழம்புடன் மிகுந்த பயபக்தியோடு பரிமாறி உண்ட மீதியினைத் தன்மனைவி மக்களுடன் அமுதெனக்கருதி யுண்டு எது விரும்பினும் கொடுத்துதவுதலாம். இதனால் நிராசையுடையவர்களை உபசரிப்பதென்பது பொருளாகின்றது. இதுவே அன்னசிரார்த்தம் என்பது. எண்ணெயிட்டு நீராட்டி ஆமைவடை மோர்க்குழம்புடன் உண்பிக்கக் காரணம் விசாரிப்பது முக்கியமாதலால் அது குறித்துச் சிறிது விளக்குவாம். இவ்வுலகம் சோமன் சூரியன் அக்கினி யென்னும் முப்பொருட்களின் சம்பந்தத்தினாலேயே தொழிற் படுகின்றதென்பதைப் பல மேதாவிகளும் சம்மதிப்பர். இந்த முப் பொருட்களுடைய விளக்கங்களினாலேயே சுவர்க்க மத்திய பாதாளம் என்னும் மூன்று உலகங்களும் அது அதில் ஊர்வன நிலைப்பனவாகிய பல வகைத்தேகங்களும் அவற்றால் அனுபவித்தற்கேற்ற பலபல விதமாகிய போகப்பொருள்களும் தோன்றி நின்று அழிவடைந்து வருகின்றன. மேலுலகமுளதென்பதும் அங்கு உயிர்கள் சென்றிருந்து சுகதுக்க மனுபவித்து மீளுமென்பதும் பலரும் ஒத்துக்கொள்வது முறை யாதலால், ஒவ்வொரு சரீரத்திலும் சூரிய சந்திர பாகங்களிருப்பது போலவே உலகிலும் சந்திராதிக்க பாகத்தில் வசிப்போர்கள் தேவர்களென்றும், சூரியாதிக்க பாகத்தில் வசிப்போர்கள் பிதிர்க்களெனவும் கொள்ளப்படுவதால், பிதிர்க்கள் மிகுந்த தாபத்துடனிருப்பதால் அவர்களை அதாவது அத் தேவர்களை ஒரு மானவ தேகத்தில் ஆவாகனம் செய்து அதாவது இருக்கச்செய்து அவர்கள் மகிழ்ச்சி யடையத்தக்க உண்டி நீர் முதலியன கொடுத்தலே மிகச் சிறப்புடையதென்றுணர்க.



ஆவேசத் தெய்வங்களிற் சில நீருண்டு மகிழும் என்பதை உதாரணமாகக் கொண்டால் சம்சயம் நீங்கி விடும். செய்நன்றியறிதலே இக் காரியமென்றதின் விபரத்தினையும் விளக்குவாம்.

மிருகங்கள் பக்ஷிகளே தங்கள் குழவியினை இரையெடுத்தருந் தக்கதாக்கொண்டபின் விலக்கி விடுகின்றன, மனிதனோ, அங்ஙனமன்று மற்றென்னெனின்? குழந்தை பிறந்தது முதல் தாயுந் தந்தையரும் பலவிதத்திலும் தங்கள் சுகத்தைக் குறைத்துக் கொண்டு தம் மக்களை ஆளாக்குவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகின்றார்கள். தாங்கள் பட்டினி கிடப்பினும் தம் மக்கள் பட்டினி யிருப்பச் சகியார். தாங்களுயிரை விடவரினும் தம் மக்களைக் காப்பதே கடனாகப் பரிந்துதவி புரிவர். பிணி வரினோ தங்கள் தேக சுகமும் போக சுகமும் வெறுத்து இரவு பகல் கண்

விழித்துப் பட்டினிகிடந்து வருந்துவது சகசமே. குழந்தைப் பருவங்கடப்பினும் கல்வி பயில்விப்பதும் மண முடிப்பதும் முடிவாக உயிர்க்குறுதி தருவது புண்ணிய மொன்றே யெனவும் அப்புண்ணியமும் பொருளாற் செய்வது தெரிந்தும் மக்களது வாழ்விற்கு வேண்டுமென்று பொருளை வைத்துவிட்டு மாணமாவது உலக அனுபவமே. இத்தனை வகையாலும் காப்பதால் தந்தையினுடைய பொருள் மக்கள் என்று திருக்குறள் கூறுவது இக் கருத்தாம் என்பது. அன்றியும் தான் குழவிப்பருவத்தில் பெற்ற கடனைத் தனக்கு வயதுவந்த போது கொடாவிடில் அது கடனாகவே நின்று பல பிறவிகள்தோறும் வருத்தும் ஆதலான், அதனை அதாவது கடனை ஒழிக்க வேண்டுமென்னும் கருத்தினாலன்றோ பிதிர்க் கடன் எனவும், பிதிர்க் கடன் கழித்தலென்பது நன்மக்கட் பெறுதல் எனவும் தரும நூற்கள் முறையிடுகின்றன. மேற் கூறியவாறு செய்யும் கிரியையே அன்னசிரார்த்த மென்றதால் வேறு பிரிவுமுள்ளன அவற்றினையும் கூறுவேன். அதாவது சமையல் செய்வதற்கு மனைவியோ, பணியாளோ, நேராத காலத்தில் பாகஞ்செய்த பாவனையுடன் சமையல் செய்து சாப்பிடத்தக்க பொருள்களைத் தருவது ஆமசிராார்த்தம் எனவும் உண்போர் கிடைக்காவிடத்து மந்தர பூர்வமாகப் பாவனையால் பிதிர்க்களை ஆவாகனம் செய்துபசரித்து முடிவில் அந்த அன்னத்தினைப் பசுவிற்கு வைப்பது அல்லது நதி குளங்களில் விடுவது சடகசிராரத்தம் என்றும் அன்றி மேற்கூறி வந்த வசதிகள் ஒன்றும் வாய்க்காத இடத்தில் பொன்னைக் கொடுப்பது ஏம சிராரத்தம் என்றும் பெயர். இதனை இரண்யசிராரத்தம் என்று கூறுவதுமுண்டு. கைவிரனுநியில் எள்ளினை எடுத்து ஒருவருக் கீய்ந்தாவது அதுவுங் கூடாதாயின் தனது கையில் எள்ளோடு நீர் கலந்து விட்டாவது அதுவுமரியதாகில் ஒரு பசுவுக்குப் பசும்புல் உதவியாவது பிதிர்க்களைத் திருப்தி செய்வது கடனாம். இதுவும் இயலாதாயின் வெறு வெளியிற் சென்று நின்று தலைமயிர்குலைய இருகைவிரித்து நீட்டி ‘‘உலகபாலர்களே! அதாவது இவ்வுலகத்தினை ஆக்கல் அளித்தல் அழித்தல் செய்து நடத்துங் கருத்தர்களே! எனது வம்சத்தர்களாகிய பிதிரர்களைத் திருப்திசெய்ய உண்மையாக என்னிடத்தில் ஒரு பொருளுங் கிடையாதாகையால், தாங்கள் அவர்களை இரக்ஷிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்’’ என்று கண்ணீர்விட்டுக் கதறிப் புலம்பி உரத்துக் கூவிப் பரிதாபப்படுவது. இம் மூன்றினையும் சங்கற்பசிரார்த்தம் என்று கூறுவர். இந்த சிரார்த்தங்களின் கருத்தினை யூகித்தால் சம திருஷ்டியுடைய ஞானிகளைக் கொண்டாவது அல்லது சமஜாதியில் படித்த வித்துவானும் உடலைவிட்டகன்ற உயிரின் போக்குவரத்துக்களினால் அனுபவிக்கும் கஷ்டசுகங்களும் நன்குணர்ந்து நம்மவர் குடும்பங்களில் இருந்திறந்த உயிர்களுக்கு நம்மவர்களைக் கொண்டு பரிகாரம் செய்து வந்தால் நமது வம்ஸங்கள் க்ஷேமமடைவதற்கு ஏதுவாகுமென்று உள்ளன்புடன் செய்பவர்களே புரோகிதர்களாவார். மாதுர் பிதிர்க்கள் செய்த அளப்பிலா நன்றிகளை நினைக்குந்தோறும் நெக்கு நெக்குருகி அவர்கள் பொருட்டுத் தக்கவர்களைக் கொண்டு நல்லகாலம் (கயை ஆதி) நல்ல இடம் பொருள் முதலியவற்றால் திருப்தி செய்வது மரபு. செய்வோனும் செய்விப்போனும் உண்போனும் ஆகிய மூவர்களின் இயல் ஆரியர்கள்பால் ஏகதேசங் காணப்படுகின்றன. ஏனையர்களுக்கு அவ்விதம் அதாவது சுருதி ஸ்மிருதி யனுசாரமாகச் செய்விப்பது கிடையவே கிடையாது. என்னே பரிதாபம்? யாவர்களுக்கும் ஆமசிரார்த்தமே செய்வது வழக்கம். இப் பரிதாபச் செயலினை யுணர்ந்த மேன்மக்கள் நமக்கு நாமே புரோகிதர்களாக இருந்தால் நன்கு கவனித்துச் செய்யப்படும் என்று ஒவ்வொரு கூட்டத்தார்களிலும் புரோகிதர்களை உண்டு பண்ணினார்கள். இருப்பினும் ஆரியர்கள் போலவே இவர்களும் ஆமசிரார்த்தம் செய்துவருகின்றார்கள். இவர்கள் கல்வி யிருந்தவாறென்னே? இவர்கள் அறிவிருந்தவாறென்னே? இவர்கள் ஆராய்ச்சி யிருந்தவாறென்னே? என்னே மடமை! என்னே கொடுமை! இனி மேலாவது நம் குலக் குருமார்களே நன்னூலை யாராய்ந்து நல்லவர்பாற் கேட்டு நம்மனோர்கள் கல்வி அறிவு ஆசாரம் செல்வம் உயர்பதவி நோயற்றவாழ்வு நன்மனை நற்புத்திரர்கள் முதலிய இங்கு பெற்று அனுபவித்தற் கேதுவாகிய பிதிர்க்கள் அன்னசிரார்த்தம் செய்து அறியாதார்க் கறிவுறுத்திச் செய்யும்படி தூண்டுதல் செய்வதோடு சமஜாதியில் தினம் வராதவனை உண்பிப்பது அதிதி போஜனமாகிய சிறந்த சமுதாய ஒற்றுமையென்னும் ஒப்பற்ற சிறந்த தருமத்தினைச் சிறு குறைகளினைக் குறித்து இழந்து விடாதபடிக்குப் போதித்து நடத்துவதுடன் தேவதாராதனை யென்பது உண்பன தின்பன வாதிகளை உடையானுக்கு

நிவேதித் துண்பது தான். இம் மூன்றும் சிறந்த தருமங்களாக வுள்ளது. இவ் வழக்கமானது எக்கூட்டத்தார் பால் காணப்படினும் அவர்கள் சவுக்கியமாகப் பலரும் ஒருங்கு கூடிவாழ ஏதுவாகின்றதைக் கண்டும் இவ்வியாசத்தினைப் படித்துணர்ந்தும் பழய வழக்கமென்னும் குருட்டு நம்பிக்கையில் விழாமல் விலகி யுய்யும்படிக்கு விரும்புகின்றேன். நிற்க, ஆரிய சமாஜ ஸ்தாபகராகிய ஸ்ரீமது தயானந்த சாஸ்வதி சுவாமிகளால் எழுதியுள்ள "சத்தியார்த்தப் பிரகாசிகை" என்னும் நூலில் சிராரத்தம் பழய வேத வழக்கின்று என்று மறுத்திருப்பது பொருந்தாது. காரணம்,

"தொன்மையதா மெவையும் நன்றாகா இன்று
தோன்றியதா லெவையுந் தீதாகா"

என்ற சிவப்பிரகாச வசனப்படிக்கு நடுநிலையிலிருந்து ஆராய்ச்சி செய்வதே அறிவுடையார் கடனாகவுளது. சரஸ்வதி அவர்கள் கூற்றிலும் கவனிக்கத்தக்க தொன்றுள்ளது. அதாவது சிராரத்தம் என்பது ஒரு சாரார் பிழைக்கும்படி செய்ய வேண்டிய முறையினை விடுத்து அரிசி முதலியதும் பணங்களும் கொடுப்பது விரோதமெனக் கண்டிப்பதே அவர் அபிப்பிராயமாகும். தேவதைகள் மனோபலமுடையவர்கள் என்பது மந்திர சக்தியினால் மனத்தில் எண்ணினவுடனே சுகமோ துக்கமோ செய்வார்கள். அதனால் உள்ளன்போடு தாங்களாவது தங்களினக் குருக்களைக் கொண்டாவது உத்தம பலனைக் கொடுக்கும் அன்ன சிராரத்தமே செய்து எல்லா நன்மைகளைப் பெற்றின்புறுமாறு எல்லாம் வல்ல தமிழ்க் கடவுள் நல்லருள் சுரப்பானாக.

கச்சியடிகள்

---

# குழந்தைகளின் பாதுகாப்பு

இந்திய மக்களின் க்ஷேமத்தை உத்தேசித்து ஒரு முக்கியமான விஷயத்தை நான் நெடுங்காலம் ஆராய்ச்சி செய்து பார்த்ததில், திடமான முடிவுக்கு வந்திருக்கிறேன். ஒவ்வொரு வருஷமும் எண்ணிறந்த குழந்தைகள் இந் நாட்டில் மாண்டுபோதல் நமது தேசத்துக்கே அவமானமாகும். இந்தக் கொடூரமான மரண விகிதத்தை எப்படித் தடுப்பது? குழந்தைகள் மரணங்கள்



இவ்வளவு தூரம் அதிகமாகி விட்டதற்குக் காரணமென்ன? நான் ஆராய்ச்சி செய்தவரையில் அடியிற்கண்ட காரணங்கள் தான் இந்தக் கோரமான மரண விகிதத்தையுண்டுபண்ணுகின்றன:—1. பிரசவ காலத்துக்கு முன்னதாகவே அரைகுறையாகப் பிரசவிக்கும்படி நேரும் சந்தர்ப்பங்கள். 2. இழுப்பு முதலிய ரோகங்கள். 3. சுவாஸகாசநோய்கள். 4. மாந்தம், 5. விடாஇருமல். 6. அம்மை ஜுரம் முதலியவை. 7. சரியான ஆகாரம் போதியவளவு கொடுக்காமலிருத்தல். 8. பால்ய விவாகம். 9. தாயின் பிணி. 10. சுகாதாரமற்ற ஸ்தலங்களில் வாஸம்.

குழந்தைகள் மரணங்களை நாம் குறைக்க விரும்பினால், முதல் 6-மாதம் வரையில் தாயின் பாலையே குழந்தைகள் உட்கொள்ளும்படி செய்ய வேண்டும். ஆயாக்களிடத்தில் கொடுத்தும், மற்றும் சில ஏற்பாடுகள் செய்தும், பணக்கார வீட்டுக் குழந்தைகளைச் சாகவடிக்கிறார்கள். அதுதான் நாகரீகமென்று நினைக்கிறார்கள். இது மிகவும் வருத்தத்திற்குரிய காரியம். தாய்ப்பாலுண்டால்தான் குழந்தைகளுக்கு நலம். தாய்க்கு உடம்பு சரியாயில்லாத சமயங்களைத் தவிர மற்றச் சமயங்களிலே ஆயாக்களை வைத்துப் பால் கொடுத்தல் விகாரமென்றே சொல்வேன். சாதாரண பசுவின் பாலைச் சுகாதாரமான வாசஸ்தலங்களிலுள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். பூச்சி நிறைந்த ஜலத்தில் தித்திப்பிட்டு சில ஆயாக்கள் குழந்தைகளை நாசமாக்குகிறார்கள். நான் இதை நேராகவே பார்த்திருக்கிறேன். தாயின்பால் இல்லாவிடில் குழந்தைகள் நன்றாக தூங்கமாட்டா. எந்த வைத்தியமாவது செய்து தாயின் பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கச் செய்வதுதான் புத்திசாலித்தனமாகும். குழந்தை பிறந்து 2 வாரங்கள் வரையில் இரண்டு அல்லது மூன்று மணிக்கு ஒரு தடவை தாயின் பாலை குழந்தைகள் குடிக்கும்படிச் செய்தாலன்றி குழந்தைகளுக்குச் சுகமில்லை.

தூங்கும்போது குழந்தைகளை எழுப்புவதாவென்று சில அஜாக்கிரதையான தாய்மார்கள் சும்மா இருந்துவிடுகிறார்கள். அது முட்டாள்தனமே யாகும். குறிப்பான நேரத்தில் குழந்தைக்குப் பால் கொடுக்காவிட்டால் வாயுவந்தடைந்து, கோளாறுகளை உண்டுபண்ணிவிடும். மற்றுஞ் சில தாய்மார்கள் குழந்தை

களுக்கு அழும்போதெல்லாம் பால் கொடுக்கிறார்கள். அதுவும் பிசகு. அளவுக்கு மிஞ்சி கொடுப்பதனால் குழந்தைகளுக்கு வியாதி உண்டாகும். குழந்தைகள் தாங்களாகவே எந்த அளவுக்குப் பாலைக் குடித்துவிடுகின்றனவோ அத்துடன் தாய்மார்கள் நின்றுவிடவேண்டும். வற்புறுத்திப் பால் கொடுக்கக்கூடாது. அதிகப்பால் கொடுத்தால் குழந்தைகளுக்கு தூக்கம் வராது. தாய்ப்பால் இல்லாவிட்டால் மூன்றி லிரண்டுபங்கு வெந்நீர் சேர்த்துப் பசும்பால் கொடுக்கலாம். தாய்மார்கள் சாப்பிடுவதற்குமுன்னும், களைத்திருக்கும்போதும், தூக்கசமயத்திலும், பால் கொடுக்காதிருத்தல் நலம். —'கிரானிகல்' மொழிபெயர்ப்பு

---

# புகழேந்தியொட்டக்கூத்தர்

இப் பெருந்தகையாளர் இருவரும், முற்காலத்தே கபிலபரணர் எனப் பெயர் சிறந்த நல்லிசைப்புலமைத் தொல்லோரோடு ஒருவாறொப்ப, இடைக்காலத்தே வேத்தவையேத்த விளங்கி வீற்றிருந்த கூர்த்த அறிவிற் சீர்த்த கல்வியர் ஆவர். இவ்விருவரும் தங்களிலே வாதுசெய்தார்கள் என்பவாகலாற் புகழேந்தியொட்டக்கூத்தரென இதரேதரத்தொகையாக இணைத்து வழங்கப்படுவர். இது கபிலபரணர் என வழங்கற்கும் ஒக்கும். வீரசோழியவுரைகாரர் பெருந்தேவர் என்பார் "கபிலபரணர் தங்களிலே வாதுசெய்தார்களென இயைபு தோற்றி நின்றமையால் இதரேதரத்தொகையாயிற்று" (தொகைப்படலம்-௭) எனக் கூறியவாற்றான் இதனுண்மை யுணர்க. இப் புலவர்பெருமக்களது காலம் வரலாறு முதலியன பல்வேறு வகையான் வழங்கப்படுவனவாதலின் அவற்றதுண்மை காண வேண்டிப் பண்டைத் தண்டமிழ் நூல்களையே பெருந்துணையாக்கொண்டு ஆராய்ந்தமட்டிற் றெளிந்தன சிலவே ஈண்டுத் தந்துரைக்கப்படுவன. *

இனி, இப் புகழேந்தியொட்டக்கூத்தர் பாடல்கள் சிலவற்றிற் 'குலோத்துங்கன்' எனப்படுஞ் சோழவரசன் பெயர் பயின்று

* இவ்வாராய்ச்சிக்கு நல்லுசாத்துணையாயமர்ந்த "செந்தமிழ்" உதவிப் பத்திராசிரியரும், என்னருமையம்மான் சேயும் ஆகிய வித்துவான் ம. இராகவையங்காரவர்கள் பெருநன்றி என்றும் மறக்கற்பாலதன்று.



வருதலால் இவர்கள் காலம் குலோத்துங்கசோழன் காலமாகுமெனக் கருதுமிடத்துச், சோழமன்னருட் பலர் 'குலோத்துங்கன்' என்னும் பெயருடையவராகத் தெரியலாகும். அப் பலருள் ஒருவன் விசயாலயன் பேரனும் ஆதித்தசோழன் மகனுமாகிப், பரகேசரி வன்மன், சங்கிராமராகவன், பராந்தகன், வீரநாராயணன் எனப் பல பெயர்களாற் சிறந்து விளங்கிய குலோத்துங்கன் என்பான். மற்றொருவன் கோப்பரகேசரிவன்மன் இராசேந்திர சோழன் எனப்பெயர் சிறந்த கங்கைகொண்ட சோழன் மகண்மகனும், சளுக்கு வேந்தனாகிய விண்டுவருத்தனன் மகனும் ஆகி, உபய குலோத்தமன் என விளங்கிய அபயனாகிய குலோத்துங்கன் ஆவன். வேறொருவன் மேற்கூறிய உபய குலோத்தமனாகிய அபயன் பேரனும் விக்கிரமசோழன் மகனும் ஆகிய குமார குலோத்துங்கன் ஆவன். இன்னும் ஒருவன் இச் சோழர் வழியிற் சங்கமன் எனப்பெயரிய சோழற்கு மகனாய்ச் சங்கரசோழனுடன் பிறந்த குமார மகீதரனெனப் பெயரிய குமாரகுலோத்துங்கன் ஆவன். ஈண்டெடுத்துக்காட்டிய குலோத்துங்கன் எனப்பெயரிய சோழவரசர் பலருள் இவ்விருபெரும் புலவர்களும் யாவர்காலத்தவர்கள் என்பது நன்காராயவேண்டுவது இன்னனம் இன்றியமையாதது ஆகும்.

இப் புலவர்கள் ஆங்காங்குப் பாடிய பாடல்கள் பலவற்றுள் குலோத்துங்கன் என்னும் பெயரே யல்லாமல் விக்கிரமசோழன், அபயன், உத்துங்கன், சயதுங்கன், கண்டன், மானாபரணன், அகளங்கன் என்பன முதலாகச் சோழர் சிறப்புப்பெயரும் பொதுப்பெயரும் பலவாகப் பயில்வன. இவ்வாறு மேலெடுத்தோதப்படும் தமிழ்நாவலர்சரிதைச் செய்யுட்களானும் விக்கிரமசோழனுலா அடிகளானும் உணர்க. இப் பலபெயர்களுட் குலோத்துங்கன் என்பது முதற்கண் ஆதித்தன் மகனாகிய வீரநாராயணசோழனுக்கு வழங்கி அவற்குப்பின்பு நெடுங்காலம் கழித்து அபயன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அது பொதுப்பெயர் போல்வது. அபயன் என்பது முதற்கண் உபய குலோத்தமனுக்கு வழங்கி அவன் வழித்தோன்றிய விக்கிரமன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அதுவும் பொதுப்பெயர் போல்வது. கண்டன், மானாபரணன், அகளங்கன் என்பன சோழர் பலர்க்கும் வழங்கும் பொதுப்பெயர்களாம். உத்துங்கன், துங்கன், சயதுங்கன் என்

பனவும் குலோத்துங்கனினின்று எடுத்தாண்ட பெயர்களாய்ப் பலர்க்கும் வழங்குவனவேயாம். இவ் வழக்கங்களை இச் சோழர் பாடல்களில் ஆங்காங்குக் கண்டுகொள்க. இனி இப் புலவர்கள் பாடலுட் பயின்ற விக்கிரமசோழன் என்னும் பெயரொன்றே மேலெடுத்துக் காட்டிய பலர்க்குச் சிறந்தபெயர் பொதுப்பெயர் போலாது ஒருகாலத்து ஒருவற்கே தனியே வழங்கிய இயற்பெயராய் அறியப்படுதலானும், அவ் விக்கிரமசோழன் பெயராற் பல பழைய சாதனங்கள் உளவாதலானும், விக்கிரம சோழனென்னும் இயற்பெயராற் சிறந்தானொருவன் சோழர்பரம்பரையிற் றோன்றியரசாண்டான் என்பது நன்கறியத்தக்கதாகும். இவ் விக்கிரம சோழன் என்னும் பெயர் குலோத்துங்கனென்னும் பெயர்போலச் சோழர் பரம்பரையினராய்ப் பல காலத்தவராகிய பலர்க்கு வழங்கப்படாமையும் தனியே ஒருகாலத் தொருவற்கே வழங்கப்படுதலும் பழைய சாதனங்களாலும் நூல்களாலும் தெரிந்துகொள்க. இங்ஙனம் ஒருவற்கே உரிய பெயரும் பலர்க்குரியதோர் பெயரும் ஒருவர் பாடலுட் பயின்றவிடத்து அப் பலர்க்குரிய பெயர்பற்றி அவருடைய காலத்தை ஆராயாது விடுத்து அவ் வொருவற்குரிய பெயர்பற்றிக் காலவரையறை செய்யப்புகுதலே இயைபுடைத்தாமென்பது எளிதி னுணரத்தக்கது. ஆதலால் இவர்கள் பாடலுட் பயின்ற விக்கிரமசோழன் என்னும் பெயர்பற்றியே இவர்கள் காலங் காணத்தகும். இவ்வாறு புகாமற் குலோத்துங்கன் என்னும் பெயர்பற்றிப் புகிற் பெரிது மிடர்ப்படும்; என்னை? குலோத்துங்கன் என்னும் பெயரொன்றே கொண்டு ஆதித்தன் மகனாகிய வீரநாராயணனென்னுங் குலோத்துங்கன் காலம் இப் புலவர்கள் காலமாம் எனக்கூறுமிடத்து, இப் புலவர்கள் விக்கிரமனைப் பாடினார்கள் என்பது மேல் நன்கு தெரியப்படுமாதலாலும், வீரநாராயண குலோத்துங்கன் கி-பி 900 முதல், 940-வரை அரசாண்டவன் எனவும் விக்கிரமசோழன் கி-பி-1118-முதல் கி-பி 1132-வரை அரசாண்டவன் எனவும் தெரிதலாலும் இவர்கள் மேற்கூறிய வீரநாராயண குலோத்துங்கன் காலமுதல் விக்கிரமன் காலம் வரை இருந்தாராவரெனப்பட்டுச் சிறிதேறக் குறைய இருநூறாண்டு உயிர் வாழ்ந்தனர்கள் எனப்படும் ஆகலான்.

*

இனி, விக்கிரம சோழன் றந்தையாகிய அபய குலோத்துங்கன் காலமே இவர்கள்காலமாம்: அக்காலத்தவர்கள் விக்கிரமனைப் பாடுதற்கும் இயலுமாதலானெனிற் கூறுவேன்—இச் சங்கத்திற்கு அரிதிற்கிடைத்த "சங்கரசோழனுலா" என்னும் அரியபழைய இனிய தமிழ்நூன் முதற்கண் சங்கரசோழனுக்கு முற்பட்ட சோழராச பரம்பரியம் எடுத்தோதிய விடத்து,

"　　*　　*　　கூடலா
ரும்ப ரணிகொள்ளக் கொள்வித் தொருகலிங்க
வெம்பரணி கொண்ட விறலோனுஞ்—செம்பதத்துக்
கூடிய 'சீர்தந்த' வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையோடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றேனுந்—தெளித்தம்
மூன்னு யகரினவன் மூதுலாக் கண்ணிதோறும்
பொன்னு யிரஞ்சோரிந்த பூபதியு—மென்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகரசல
பூசக்ர மேழும் புரந்ததற்பின்
*　　*　　*　　*　　*
சங்கமன் றொல்லைத் தவம்போல.........
*　　*　　*　　*　　*
வல்லம ஞாதி மனுவினு மேதக்க
நல்லம னென்கின்ற நாயகற்கும்.........
*　　*　　*　　*　　*
பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மாகீதரற்கும்—மெய்த்துணையாய்த்
தோன்றிய சங்கர ராசன் சுராசன்."

எனவும், அந்நூலிறுதியில்:—

"பருவத் தெழுவகைமைப் பாவையரெல் லாருந்
தெருவத் தினைய திளைப்பப்—பரணிக்
கவியாற் சயங்கொண்டான் கட்டுரைப்பக் கொண்டான்
குவியாக் கரத்தரசு கொண்டான்—கவிகை
கிலாக்கொண்டான் கூத்த னிகழ்ந்த வொருமூன்
றுலாக்கொண்டான் போந்தா னுலா."

எனவும் வருவனவற்றுட் பரணிகொண்ட விறலோன் பின்னே கூத்தனுலாச்சூடிய விக்கிரமசோழனும், கூத்தன் உலாமாலையோடு பிள்ளைத்தமிழ்மாலை பெற்ற சோழனும், கூத்தனுலாக் கண்ணிதோறும் பொன்னுயிரஞ்சோரிந்தபூபதியும் என மூவர் கூறப்படுதலுடன்,

ஒட்டக்கூத்தர் மூன்றுலாப் பாடினரென்பதுங் கூறப்பட்டது. இனிப் பரணிகொண்டவிறலோன் அபயனாகிய உபய குலோத்த மன் என்பது பலருமறிவர். அவ் வபயன்மகன் விக்கிரமசோழன் என்பது ஒட்டக்கூத்தர் 'சீர்தந்த தாமரையாள் கேள்வன்' என எடுத்த விக்கிரமசோழ னுலாவின்கண்,

"... ... ... ... கூடல
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனு—மங்கவன்பின்
காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தஞ்
சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினான்—மேலைக்
கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல்கொண்ட மாராட் டரசை—யுடலை
யிறக்கி வடவரையே யெல்லையாய்த் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப் பார்விளங்கத்
தோன்றியகோன் விக்கிரம சோழன்."

எனக் கூறியதனானும் பழைய சாதனங்களானும் நன்கறியலாகும். இவ் விக்கிரமசோழன் மகன் குலோத்துங்கன் என்னும் பேயரே பூண்டவன் என்பதும் அக் குலோத்துங்கன் மகன் இராஜராஜ னென்னும் பெயரினான் என்பதும் புராதனசாதன ஆராய்ச்சி யுடையார் பலரும் அறிந்தனவேயாம். சங்கரசோழனுலாவாற் கூத்தரான் உலாப்பாடப்பட்டோர் விக்கிரமசோழனும் அவன் பின் அரசாண்ட சோழரிருவருமே என்பது நன்கு தெளியப்பட்டது. விக்கிரமசோழன் றந்தையாகிய அபயன் சயங்கொண்டார் பாடிய பரணிகொண்டான் என்பது தெரிவதன்றி, அவ் வபயன் கூத்தர்பாடல் கொண்டான் என்பதொன்றும் அச் சங்கரசோழ னுலாவாற் றெரியலாவதில்லை. ஆதலாற் சங்கரசோழனுலாவிற் கூறியதற்கியையக் கொள்ளுமிடத்து விக்கிரமசோழனும், அவன் மகன் குலோத்துங்கசோழனும், அவன் மகன் இராசராசசோழ னுமே கூத்தர்பாடல் கொண்டனராவர் எனவுணர்க. அபயனும் கூத்தர்பாடல் கொண்டவனாயின் இக் கூத்தர் நான்கரசர் காலத் திருந்தாரெனப்பட்டு இவரதாயுட்காலம் வரம்பின்றியோடுமென்க.



சங்கரசோழனுலாவாற் கூத்தர் விக்கிரமசோழன் மகனாகிய குலோத்துங்கனைப் பாடியுள்ளார் என்ப தறியப்படுதலால், இக் கூத்தர் பாடலுட் பயின்ற குலோத்துங்கன் என்னும் பெயரும் அவ் விக்கிரமசோழன் மகன் குலோத்துங்கனையே குறிப்பதாமென்பதெளிதிற் கொள்ளத்தகும். குலோத்துங்கனுலா என்னும் நூலும் அவனையே பற்றியதாகும். அவன், உலாவன்றிப் பிள்ளைத்தமிழ்மாலையுங் கூத்தர்பாற் பெற்றானென்பது தெளியப்படுதலால், அவனிளம்பிராயந்தொட்டுக் கூத்தர் அவன்பாற் சிறப்புற் றிருந்தனரென்ப தூகிக்கப்படும். குலோத்துங்கன் கோவையென்பது இச் சோழனையே பற்றியதாம். அதன் கட் பலவிடங்களி லும் 'குமாரகுலோத்துங்கன்' என வருதலையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

இனிப் 'பாடுங் கவிப்பெருமா னொட்டக் கூத்தன் பதாம்பு யத்தைச்—சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே.' என்று பாடிய சோழனும் அக் குமார குலோத்துங்கனே யாவன். கூத்தர் தன் தந்தைக்கு உறுதுணையாய் விளங்கிய சிறப்புப்பற்றியும், தான் அவர்பாற் கல்விபயின்றமைபற்றியும் இளைய னான அச் சோழன் அக் கூத்தரைப் பராஅய்ப் பாடினானவன் தமிழ் நாவலர்சரிதைக்கண் "சரசுவதி தம்பலங் கொடுக்கக் கவிதையுண் டாகிய கூத்தமுதலியார் * அரும்பைத் தொள்ளாயிரம் பாடும் போது விக்கிரமச்சோழன் கேட்டு ஒரு கவியை ஒட்டச் சொல் லென்று சொன்னபோது பாடியது" என்னுந் தலைப்பின்கீழ்,

"நடித்தது நச்சா வுச்சியி னுச்சி மதிவிலங்கை
பிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டா
லடித்தது பொற்கிரி விக்ரமசோழ வகளங்கனே."

என்றோர் செய்யுள் காணப்படுகின்றது. இச் செய்யுளைத் தலைக் குறிப்புடன் நோக்கின், விக்கிரமசோழன் அரசுபுரிகின்ற காலத் தேதான் கூத்தர் வரகவியாய்ப் போந்தனரென்பது புலனாம். அவ்

---

* இது முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம், சயங்கொண்டார் செட்டிகண்மேற் பாடிய இசையாயிரம் என்பனபோல்வதொன்றாம். இலக்கணவிளக்கப்பாட்டியல் அ௪-ஆம் சூத்திரவுரைக்கண் 'அரும்பைத்தொள்ளாயிரம்' என ஒரு நூல் காட்டப்பட்டது இதுவேபோலும்.

விக்கிரமன் பின் இரண்டு தலைமுறையரசரைப் பாடினர் என்பதனால், இப்புலவர்க்குக் கவிதையுண்டாகிய காலம் விக்கிரமசோழனுடைய பிற்காலமேயாம்; அஃதே இக் கூத்தரது இளமைக் காலமாமென்பது உய்த்துணரலாகும். இதனால், கூத்தர் விக்கிரசோழன் அரசெய்திய பின்னிலையினும், அவன்மகன் குமாரகுலோத்துங்கன் காலமுழுதும், அவன் மகன் இராசராசன் இளமையினும் இருந்தனராவர் என்றலே மேலுரைத்தவற்றோடு பொருந்துவதாம். இராசராசனுலா என்பது கூத்தர் குமாரகுலோத்துங்கன் மகனைப் பாடியதாகுமென்பது அறியத்தக்கது. தமிழ்நாவலர்சரிதைக்கண், புகழேந்தியார் ''தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது பாடியது'' என்னுந் தலைப்பின்கீழ்,

"தூபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றானின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணியன்ன மேயெளி தோநங் குடிபிறப்பே."

என ஓர் செய்யுள் வரையப்பட்டுள்ளது. இதனாற் புகழேந்தியாரும் விக்கிரமசோழனைப் பாடினாரென்பது அறியத்தகும். புகழேந்தியார் ஒட்டக்கூத்தருடைய நீண்ட ஆயுட்கால முற்றும் இருந்தனரென்பது நன்குபுலனாகாவிடினும், அக் கூத்தர் குமாரகுலோத்துங்கன்பாற் சிறக்க வீற்றிருந்த காலத்தளவும் அப் புகழேந்தியாரும் இருந்தனராவர் என்பது, அக் குமாரகுலோத்துங்கன் காலத்தே இப் புலவர்களிருவரும் தத்தம் புலமை மேம்பாடுணர, ஒரே பொருள்பற்றிப் பாடிய பாடல்கள் சிலவற்றான் ஆய்ந்துணரத்தகும். இப் புலவர்கள் பாடலுள், அபயன் முதலாகச் சில பழைய பெயர்களும் பயில்வன எனின்; அவை அக் குலத்து, முன்னோர் சீர்த்தியைப் பின்னோர்க்குப் புனைந்துரைத்தாங்கு, அம் முன்னோர் பெயர்களையே பின்னோர்க்கும் கூறியனவேயாகுமென்க. இவ் வழக்குப் பண்டைத்தண்டமிழ் நூல் எல்லாவற்றும் பயின்றதே. இத் துணையுங் கூறியவாற்றான், இப் புலவர்கள் இன்ன அரசர்கள் காலத்தவர்களென்பது நன்குணரப்படும்.

இவர்களுட் புகழேந்தியார் தொண்டைநாட்டுள்ள களந்தை என்னும் ஊரினராவரென்பது 'மாலார்களந்தைப் புகழேந்தியுந் தொண்டை மண்டலமே' எனவும், 'ஐயன்களந்தைப் புகழேந்தி



யாண்டான்' எனவும், 'காரார்களந்தைப்புகழேந்தி' எனவும் தொண்டைமண்டல சதகத்துப் பலவிடத்துங் கூறப்படுதலாற் றெரிகின்றது. இவர் பாடிய நளவெண்பா என்னும் நூலில் முரணை என்னும் நகர்க்கணிருந்த சந்திரன் சுவர்க்கி என்னுஞ் சிற்றரசனொருவன் புகழப்படுகின்றான். அதனான், அவன் இவரைப் பெரிதும் ஆதரித்தவனென்பது அறியப்படுகின்றது. இம் முரணைநகர் உறையூர்ப்புறத்து மள்ளுவநாட்டின் கண்ணது என்ப. இவர் தம்முடைய நளவெண்பாவின் மூன்றுகாண்ட முதற்கண்ணும் திருமாலை வாழ்த்திப் புகுதலானும், நூலிடையில், நளனைக் கலி தொடரும்போது 'நாராயணாய நமவென் றவனடியிற் சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்......சேர்ந்தான் கலி' எனவும், அவனைக் கலி நீங்கும்போது 'மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்வாகப் புக்கோரருவினைபோற் போயிற்றே' எனவும் எடுத்துரைத்தவாற்றானும் சமயகோட்பாட்டில் வைணவர் ஆவர் என அறியப்படுகின்றனர். தொண்டைமண்டல சதகத்து,

காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தி
னோராது நையும் படியென்ற பாடலி னேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை யூர்தொண்டை மண்டலமே.

எனவரும் பாட்டான் இவர் செஞ்சியர்கோன் கொற்றந்தையைப் புகழ்ந்து கலம்பகநூலொன்று பாடினாரென்பது புலனாகின்றது. ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழனுலாவின்கண், அச் சோழன்— படைத்தலைவர், அமைச்சர், சிற்றரசர், மண்டலிகர் எனப் பலர் இருமருங்கும் மொய்த்தீண்டத் திருவுலாப்போந்தான் எனக்கூறுமிடத்து, அப் படைத்தலைவர் முதலியோரை வரிசைப்பட வைத்துரைக்கின்றனர்; அவர்;—கலிங்கம் வென்ற * தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன் கண்ணன், வாணன், காலிங்கர்கோன், செஞ்சியர்கோன் காடவன், வேணாடர் வேந்து, அனந்தபாலன், வத்தவன், சேதிநாடன், ஆனைகாவலன், அதிகன், வல்லவன், திரிகர்த்தன், மல்லவன், கோசலன், மாகதன், மாளுவன், வில்லவன், கோளன், மீனவன், பல்லவன் என இவரானோர். இவருட் புகழேந்தியாரால் கலம்பகம் பாடப்பெற்றோன்

* இவன் முதலிய சிலர் விக்கிரமசோழன் தந்தை காலத்தும் பெருஞ் சிறப்பெய்தியோராவர்.

செஞ்சியர்கோன் காடவன் என்பானுவன். இது புகழேந்தியாரும், செஞ்சியர்கோனும், விக்கிரமசோழனும் ஒருகாலத்தவராதலால், ஆய்ந்தறியத்தகும்.

“... ... ... ... ... கடியாணச்
செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
சம்பக் களியானைக் காடவனும்” ... ...

என அவ்வுலாவிற் கூறப்படுதலால், இவன் செஞ்சிக்கண்ணே உயர்ந்த வலிய அரணொன்றமைத்து வாழ்ந்தோனென்பதும் காடவர் குடியினன் என்பதும் அறியப்படுவன. காடவர் என்பது பல்லவர் வகுப்பினர்க்கு ஒரு குடிச் சிறப்புப் பெயர். கொற்றந்தை யென்பது அவன் இயற்பெயர் போலும். புகழேந்தியார் அக் கலம்பகத்து,

கையும்படியேநாங்கொற்றநங்கோன்செஞ்சிவரைமீதே
யையம்பெறுநுண்ணிடைமடவாயகிலின்றாபமுகிலன்று
பெய்யுந்துளியோமழையன்றுபிரசத்துளியேபிழையாது
வையம்பெறினும்பொய்யுரைக்கமாட்டார்தொண்டைநாட்டாரே.

எனப் பாடுதலாற் செஞ்சியர்கோனுக்குக் கொற்றன் என்பதும் பெயராமெனத் தெரிகின்றது.—தொடரும்.

—“மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்” தொ-2, ப-12.

---

# ஸ்ரீ படிக்காசுப் புலவர் சரிதம்

“ காழி நகர்முனியும் கைக்கோள மாமுனியும்
வேழம் பணிமுனியும் மேதினியில்—வாழ்வுறவே
காசு படியதனிற் கண்டுவைத்தா னென்பவே
தேசம் பெருக்கடையத் தேர்.”

ஸ்ரீ படிக்காசுப் புலவர் * தொண்டைமண்டலத்திலே பொன்விளைந்த களத்தூரில் சைவ செங்குந்த குலத்தில் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது வருடங்கட்கு முன்பு அவதாரஞ் செய்தவர்.

* இவர் பிள்ளைத் திருநாமம் களந்தையானென்ப.



புலவர் சைவசமய முறைப்படி சமயவிசேடம் பெற்றுச்சிவாநுக்கிரகத்தால் வடநூலொடு தமிழ்க்கலை முழுதும் பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினை யடைந்து,—

“ இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.”

என்னும் பொய்யாமொழிக் கிணங்க மணவினை பூண்டு இல்லறதருமத்தைச் செவ்வனே நடத்திக்கொண்டு வந்தார். அப்படி வருங்காலத்தில் தன்மனையாளிடம் ஒரு சற்புத்திரனைப் பெற்றார். அப்புத்திரனுக்குப் பால் பற்றாமையால் அதனை யுத்தேசித்து, அந்நாட்டிலே யுள்ள வல்லமாநகரை யடைந்து, அவ்வூர்த் தலைவராய காளத்திபூபதி என்னும் கொடையுடையாரைக் கண்டு,—

“பெற்றா ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யாவல்ல மாநகர்க் காளத்தியே.”

என்ற பாடலைப் பாடி அப் பிரபுவால், சில பாற்பசுக்கள் கன்றோடு அளிக்கப்பெற்று,—

“வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யாருமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பசிரொனுஞ்சொல்!
மொழியாம லென்னை வரவிட்ட பாவை முசித்துச்சதை
கழியாம லாவளித் தாய்வல்ல மாநகர்க் காளத்தியே.”

என்னும் பாடலால் மீண்டும் அப்பூபதியைப் புகழ்ந்துபாடித் தமது வீடு சென்றடைந்திருந்தார்.

அதன் பின்பு, புலவர் மாவண்டூரிலே மிக்க பிரபுவாயிருந்த கஸ்தூரி முதலியார் குமாரராகிய கருப்ப முதலியார் என்னும் ஓர் வேளாளர் தொண்டைமண்டல சரிதையைப் பாவாகப் புகழ்ந்து பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டமையால், அவர் வேண்டுகோட்கிணங்கி, “தொண்டைமண்டல சதகம்” என்னும் பெயரினால் அம் மண்டலச் சரிதையைப் பாவாகப் பாடி அரங்கேற்றி அவரால் வேண்டிய திரவியங்களும் பல்லக்கும் கொடுக்கப்பெற்றதோடு அப் பிரபுவால் அப் பல்லக்கும் சுமக்கப்பெற்றுப் பெரும் புகழெய்தி மீண்டும் அவர்மேல்,—

"காவை வென்றிடு கத்தூரி கண்மணிக் கறுப்பனென்னு
மாவை யம்பதி யான்றொண்டை மண்டலச் சதகங்கேட்டு
நாவலர் புகழ்ந்து மெய்ச்ச நவநிதி பொழிந்துநன்றூப்
பூவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தினானே."

என்னும் பாடலையும்,

"எல்லப்பனம்மையப்பன் றருதிருவேங்கடநாதனெழிற்சீராமன்
வல்லக்கொண்டையன்மாதைவேங்கடேசுரன்போலவரிசைசெய்தே
செல்வத்தம்பியருடனேகத்தூரிமகன்கறுப்பன்றெருவீதிக்கே
பல்லக்குந்தான்சுமந்தான தமக்கோராயிரம்பொன்பரிசுதானே."

என்னும் பாடலையும்,

"ஓர்கறுப்புமில்லாததொண்டைவளநன்னாட்டிலுசிதவேளைச்
சீர்கறுப்பொன்றில்லாதகத்தூரிமன்னனருள்சேயைப்பார்மே
லார்கறுப்பனென்றுசொல்லியழைத்தாலுகாமவனையன்பினாலே
பேர்கறுப்பனிறஞ்சிவப்பன்கீர்த்தியினால்வெளுப்பனெனப்பேசுவோமே."

என்னும் பாடலையும் பாடி அவ் வேளாண் பிரபுவை மகிழ்வித்துப் பின்பு பல தலங்களையும் தரிசிக்கவெண்ணி சோழநாடடைந்து அந் நாட்டிலுள்ள சில தலங்களைத் தரிசித்துகொண்டு சிதம்பரத்தையடைந்து சிற்சபா நாயகரையும் சிவகாமி யம்மையாரையும் தரிசித்துச் சில பகல் அங்கே தங்கியிருந்தார்.

இப்பால், புலவர் சிதம்பரத்தினின்றும் புறப்பட்டு அச் சோணாட்டிலுள்ள மற்றும் பல தலங்களைத் தரிசித்து கொண்டு காயற்பட்டணத்தை யடைந்தார். அக்காலத்தங்கு வள்ளலாய் விளங்கியிருந்த சீதக்காதி என்னும் பிரபுவின் புகழை,—

"ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராமலே யன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே."

என்னும் பாடலையும்,

"ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்தும் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் வேள்சீதக் காதி யொருவனுமே."



"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண் டொலைவில்பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே."

என்று மிவைபோன்ற பல பாடல்களையும் பாடி அப் பிரபுவால் மிக்க உயர்ந்த வைரமோதிர முதலாய பரிசுகளைப் பெற்றுத் திருச்செந்தூரை அடைந்து முருகக்கடவுளைத் தரிசித்து,—

"முற்கரையப்பரையேறவிட்டாட்கொண்முதல்வர்க்கருள்
கற்கரைக்கும்படிபோதித்திடுங்கருணைக்கடலைச்
சிற்பரைக்குட்டியையெங்குந்தித்திக்குஞ்செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக்கண்டேன்செந்தூரெனுந்தானத்திலே."

என்ற செய்யுளையும்,

"முன்னநின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளியகா லல்லவோ வென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் றானோ செந்தூரி லிருப்பவனே."

என்ற செய்யுட்களையும் பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுப் பாண்டிநாட்டுத் தலங்கள் பலவுந் தரிசித்துகொண்டு இராமநாதபுரத்தை யடைந்து அப்போதங்கு அரசு புரிந்த கிழவன் 'சேதுபதி' என மறுநாமம் பெற்ற இரகுநாத 'சேதுபதிக்கு ஆஸ்தான வித்துவானாய்ச் சிலகாலமிருந்து வந்தார். அந் நாளிலே புலவர்,—

"மூவேந்தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொட்டும்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம் பஞ்சாகப் பறக்கையிலே
தேவேந்த்ரதாரு வொத்தாய் ரகுநாத செயதுங்கனே."

என்னும் பாடலாதியாற் சேதுபதியைப் புகழ்ந்துபாடி அவரால் அநேகம் விருதுகளும் பரிசுகளும் பல்லக்கு முதலியவும் பெற்று மதுரையை அடைந்தார்.

இவர் வரவின் ஆரவாரத்தைக்கேள்வியுற்றத் திருமலைநாயகர் என்னும் அரசன் அவரது புலமையை யுணராது விபரீதங்கொண்டு

புலவரைத் தமது அரண்மனையிலுள்ள கிளிக்கூட்டுச் சிறையிலே அடைத்து வைத்தான். அத் தருணத்திலே புலவர்,—

"நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த பராச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்து வைத்தா யிரைதாவென்று கூப்பிடுதே."

என்ற பாடலைப் பாடினர். உடனே அவ்வரசன் புலவர் அவர்களை விடுவித்து அவர்க்கு வேண்டிய பரிசுகளையும் கொடுத்து தாம் உணராது செய்த அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். இப்பால், புலவர் பெருமான் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு சோணாட்டுத் தண்டலை நீணெறியென்னும் தலத்தை அடைந்தார். அப்போதங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளின்படி "தண்டலையார்சதகம்" என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்து சிவபெருமான் சன்னதியில் அறங்கேற்றிச் சின்னாள் அங்கு வசித்திருந்து அப்பால் சீதக்காதி என்னும் பிரபுவை மீண்டும் பார்க்க எண்ணி காயற்பட்டணத்தையடைந்தார். அப்போதங்கிருந்த அன்பர்கள் புலவர் அவர்களை வரவேற்று சீதக்காதியின் மரணத்தை அறிவித்தனர். உடனே புலவர் அவர்கள் மனம் வருந்தி,—

"விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய் விளங்குதே வேந்தரனெனும்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி கமலநிகர்
தண்ணுக் கிசைந்த வதனசந்த் ரோதய சாமியிந்த
மண்ணுக்குள் ளேயொளித் தான்புல வோர்முகம் வாடியவே."

என்னும் பாடலையும்,

"மறந்தாகிலு மரைக்காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன விருந்தாலதென்ன விறந்து விண்போய்ச்
சிறந்தாலுங் காயற் றுரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே."

என்னும் பாடலையும் பாடி அங்கிருந்தும் புறப்பட்டுத் தருமபுரத்தை அடைந்தார். அக்காலத் தவ்வாதீனத்தில் மகா சன்னிதானமாக விளங்கிய ஞானசம்பந்த தேசிக மூர்த்திகளால் புலவர் பெருமான் அவர்கள் ஞானதீக்ஷையும் சந்நியாசமும் பெற்று, சிலகாலம் ஞானாசாரியருவக்குமாறு, அணுக்கத் தொண்டரா யமர்ந்



திருந்து, பின்னர் ஆசிரியரின் ஆக்கினையின்படி வைத்தீஸ்வரன் கோயிலை யடைந்து அக்கோயிற் கட்டளைகளை நடத்திக்கொண்டு கட்டளைத் தம்பிரானென்னும் சிறப்புப் பெயர்கொண்டு அமர்ந்திருந்தனர். அக்காலத்திலே அத் தலத்தைச் சுட்டிப் 'புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம்' என்னும் ஓரரிய பிரபந்தமியற்றி அச் சந்நிதியில் அரங்கேற்றினர்.

அதன்பின்பு, புலவர் அவர்கள் சிதம்பரத்தைச் சேர்ந்து அங்கு ஒரு திருமடம் எடுத்து அதிலிருந்துகொண்டு தினந்தோறும் கடவுள் திருச்சந்நிதியை யடைந்து தெரிசித்து வந்த நாட்களில் ஓர்நாள்,—

"பொல்லாதமூர்க்கருக்கெத்தனை தான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டானகுணம்வருமோநடுராத்திரியிற்
சல்லாப்புடவைகுளிர்தாங்குமோநடுச்சந்தைதனிற்
செல்லாப்பணஞ்செல்லுமோதில்லைவாழுஞ்சிதம்பரனே."

என்னுஞ் செய்யுளையும்,—

"வேல்கொடுத்தாய்திருச்செந்தூரர்க்கம்மியின்மீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின்மணவாளனுக்குக்கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய்மதவேளுக்குமூவர்பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்கேதுங்கொடுத்திலையே."

என்னும் செய்யுளையும் பாடித் துதித்தனர். அப்போது சிவகாமி அம்மையார் மனமுவந்து தமது பஞ்சாக்ஷரப்படியில் ஒவ்வொரு நாளும் ஐந்து பொற்பணம் இருக்கும்படி அவருக்கு அனுக்கிரகம் செய்தருளினர். புலவர் அவற்றைக்கண்டு வியந்து ஆனந்தங்கொண்டு அப்பொற் பணத்தைப் பெற்றுப் படிக்காசுப் புலவர் என்னும் சிறப்புப் பெயரோடு ஒவ்வொரு நாளும் காலை உச்சி மாலை யாமம் தோறும் தவறுமல் நடராஜப் பெருமானையும் சிவகாமியம்மையாரையும் தெரிசித்துகொண்டு அடியர் கூட்டத்தோடு அளவளாவி அத் தலத்திலேயே எழுந்தருளியிருந்தார். அப்போது பல பிரபந்தங்கள் பாடியும் வரலாற்று முறையில் பல நன்மாணக்கர்களுக்கு உபதேசம் செய்தும் வந்து ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவடி நீழலையடைந்தார்.

இப் புலவர் பெருமானால் இயற்றப்பட்ட நூல்களின் செய்யுட்டிறத்தைப்பற்றி, இவருக்குப் பிற்காலத்தில் வந்த பல பட்டடைச் சொக்கநாதப் புலவர்,—

"மட்டாரும்பொற்களந்தைப்படிக்காசனுரைத்தமிழ்வரைந்தவேட்டைப்
பட்டாலேசூழ்ந்தாலுமூவுலகும்பரிமளிக்கும்பரிந்தவேட்டைத்
தொட்டாலுங்கைமணக்குஞ்சொன்னாலும்வாய்மணக்குந்துய்யசேற்றில்
நட்டாலுந்தமிழ்ப்பயிராய்விளைந்திடுமேபாட்டினதுநளினந்தானே."

என்று புகழ்ந்திருக்கின்றனர். இஃதன்றியும்,—

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ
　　செயங்கொண்டான் விருத்தமென்னு
மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா
　　அந்தாதிக் கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
　　வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச
　　லாதொருவர் பகரொணாதே."

என்ற ஓர் தனிச் செய்யுளும் வழங்கப்படுகின்றது. இதனால், நமது படிக்காசுத் தம்பிரான் அவர்கள் தமிழ்ப்பெரும் புலவராய் விளங்கினார் என்பது புலனாகின்றது.

குறிப்பு:—மதுரையை அரசாண்ட திருமலை நாயகர் காலத்திருந்த கிழவன் சேதுபதியென மறுநாமம் பெற்ற இரகுநாத சேதுபதி கி. பி. 1647-ம் வருஷத்துக்கும் கி. பி. 1700-ம் வருஷத்துக்கும் இடையே, இராமநாதபுரத்தை அரசுபுரிந்ததாகக் காணப்படுகிறபடியாலும் நமது புலவர் பெருமான் அச் சேதுபதியின் ஆஸ்தான வித்துவானாயிருந்து அவரைப் புகழ்ந்துபாடி பல பரிசுகள் பெற்றதாகக் காணப்படுவதாலும் இவர்கள் இற்றைக்குச் சுமார் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகக் கணக்கிடப்படுகிறது.

இச் சரித்திரம் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் பதிப்பித்த தொண்டைமண்டல சதகம், யாழ்ப்பாணத்துத் தமிழ் நாவலர் சரிதை, பாவலர் சரித்திர தீபகம், தனிப்பாடற் றிரட்டு முதலிய பல நூற்களிலிருந்து கிடைத்த ஆதாரத்தைக்கொண்டு ஒருவாறு சுருக்கி எழுதப்பட்டிருக்கிறது.

இப் புலவர் பெருமாடுவதற்கு ஏழு அங்கத்தினர்களுக்குக் றத்தைப்பற்றி, இசைவேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது.

சாக்காதப்பர்க சபை ஒவ்வொரு மாதத்திலும் கடைசி சனிக மட்டாயின்று கூட்டப்படவேண்டு மென்றும், அதைப்பற்றி அங் தினருக்கு ஒரு வாரத்திற்குமுன் அறிக்கை செய்ய வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

4. பிரசாரம்.

A. திருமழிசை நாட்டைச்சார்ந்த கிராமங்களில்,—

திருவாளர்கள். M. இராமலிங்க முதலியார், M. சரவண முதலியார், தி. அ. சண்முக முதலியார் முதலியவர்களும்,

B. காஞ்சிபுரத்தில் திருவாளர்கள் M. சரவணமுதலியார், தி. அ. சண்முகமுதலியார், திரு.வீ. திருஞானசம்பந்த முதலியார், னா. வஜ்ஜிரவேலு முதலியார், கா. உ. பொன்னுசாமி முதலியார் முதலியவர்களையும்,

C. மானம்பதி, பெருநகர் முதலிய இடங்களில் திருவாளர் கள். கா.உ. பொன்னுசாமி முதலியார், மா. அ. கனகசபை முதலி யார், M. B. கந்தசாமி முதலியார், B.A., B.E., M. சண்முகசுந் தர முதலியார் M.A., L.T., முதலியவர்களும் பிரசாரம் செய்யும் படி நியமிக்கப்பெற்றனர்.

5. பிரசாரகர்கள் கவனிக்கவேண்டியவை சேங்குந்தர் சரித் திரம், தற்கால நிலைமை, கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்தல், பத்திரி கையைப் பரவச்செய்தல், அங்கத்தினரைச் சேர்த்தல் ஆகியாம்.

6. பத்திரிகையை நடத்தல், பத்திரிகை தடையின்றி நடை பெறும் பொருட்டுப் பல சேங்குந்த குல சீமான்களை அதற்குப் போஷகராக இருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.

7. திருவாளர்கள். M. B. கந்தசாமி முதலியார் B.A., B.E., M. சரவண முதலியார், S. T. நடேச முதலியார் ஆகிய மூவரும் சிரிய சபையின் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டனர்.

...த் திறந்து வைத்து அப்போது நிகழ்த்

...ளே, பிரபுக்களே, சமூகத்தவர்களே, சகோதரர்
...தரிகளே, தாங்கள் என்னை விசேஷமாக நினைத்து
...கத்தை திறந்துவைக்கும்படி எனக்கு இட்ட கட்டளையை
...றுக்க இயலாது இப் பணியை சிரமேற்கொண்டு திறந்துவைத்தேன். இச் சமூக சபையானது நமது முன்னோர்கள் பண்டைய காலத்தில் அனுபவித்த உன்னத நிலைமையையும், அரசுரிமை புரிந்த நிலைமையையும், ஒற்றுமையையும் நாம் பல சாஸ்திரங்கள் மூல்யமாய்த்தெரிந்திருக்கிறோம். தற்காலம்கல்விகல்லாமையாலும், வறுமையின் கொடுமையினாலும் நமது சமூகம் வரவர முன்னேறு வண்ணமிருக்கிறது. தற்காலத்தில் பல்வேறு வகுப்பினரும் கால இயல்புக்கு ஏற்றவாறு நடையுடை பாவனைகளைத் திருத்தி முன்னேற்றமடைந்து வருவதுபோல், இக்காலத்தில் நம்மவர்கள்பெரும்பாலோர் கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலியவற்றில் திறமைவாய்ந்திருக்கிறார்கள். அன்னோர்கள் வாய்வேதாந்தங் கூறாது செய்கையில் சமூகத்தவர்களைக் கல்வி, செல்வம் முதலியவற்றிலும் அரசாங்க நிர்வாகத்திலும் பழகச் செய்ய முன்வரல் வேண்டும். அதற்கு இச் சங்கம்தான் முதல் காரணமாகும் என்று விரிவாக சொற்பொழிவு நிகழ்த்தி, சந்தண தாம்பூலம் கல்கண்டு வழங்கப்பெற்று, மகாத்மா காந்திக்கு ஜே என்று கரகோஷத்துடனும் சமூகத்தவர்கள் பல பேர்களுடனும் ஷை ஊர் நாகநாத சுவாமி கோவில் தீர்த்தக்கரை மகாமண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் கூட்டம் நடைபெறுமென்று நோட்டீஸ் மூலமாய் பல இடங்களுக்கும் தெரிவித்திருந்தது. பல கிராமங்களிலுமிருந்து சமூகத்தவர்கள் சுமார் 200 பேர் வரைக்கும் வீற்றிருந்தார்கள். அவ்வமயம் மாயவரம் கூறைநாடு V. இரத்தினமுதலியார் B.A., அவர்கள் ஷை திருநாகேஸ்வரம் வடக்கு வீதி திருவாளர் வ. மு. ந. பொன்னம்பல முதலியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரரேபிக்க நாகப்பட்டணத்தைச் சேர்ந்த சிக்கல் பொருள்வைத்தசேரி செங்குந்த மகாஜன சபைத் தலைவர் செ. நமசிவாய முதலியார் அவர்களும் ஷை திருநாகேஸ்வரம் ஜவுளி வியாபாரம் மு. மருதமுத்து முதலியார் அவர்களும் ஆமோதித்து நீண்ட கரகோஷத்தின் இடையே திரு. பொன்னம்பல முதலியார் அவர்கள் ஆசன...

## சங்குந்தகுல சங்கம்

கரவை மிகுசெங் குந்தர்சங்க
குகா தெஞ்ஞான்று மழகுபெற—மருவாரும்
பொற்கடப்ப மாலேபுனே புங்கவனே எஞ்ஞான்று
நற்கருணே செய்வாய் நயந்து.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

என்ற திருவள்ளுவ நாயனர் திருவாக்கின்படி மானிடராய்ப் பிறந்தது முதல் ஒப்புயர்வின்றி மிக்குவாழ விரும்புவோனே மனுஷன் அஃதின்றி 'இராமனுண்டாலென் இராவணனுண்டாலென்' நமக்கென்ன என எண்ணியிருப்போன் மனுஷனல்லன் அவனுக்கும் விலங்குகளுக்கும் யாதும் பேதமில்லே. ஆசிரியர் தொல்காப்பியனர் 'மக்கடாமே ஆறறிவுயிர்' என்ருர். ஆகையின் கடவுள் நமக்கு அளித்த பகுத்தறிவுக்கு ஏற்ப நாமும் சனசமூக வாழ்க்கைக்கு வேண்டும். இக் காரணம்பற்றியே நம் குலத்தோரிற் சிலர் ஒருங்கு கூடி கரவைச் சேங்குந்த குல சங்கம் என்ற நாமத்துடன் இச்சங்கத்தை 1927-ம் ஆண்டு பங்குனிமாதம் 21-ந்தேதி சனிக்கிழமை ஆரம்பித்தனர். இச் சங்கம் தென்னிந்திய செங்குந்த சங்கத்திற்கோர் கிளேபோலிருக்கிறது.

சங்கவொழுங்கு

தலேவர்:—ஸ்ரீமத் K. K. சிற்றம்பல முதலியார் Teacher middle school, உபத்தலேவர்:-P. K. பொன்னம்பலமுதலியார் Head Teacher Govt school, காரியதரிசி:—P. R. ஆழ்வாப்பிள்ளே முதலியார், உதவிக் காரியதரிசி—S. கணபதிப்பிள்ளே முதலியார், A. N. வேலுப்பிள்ளே முதலியார், சுதேசவைத்தியர் பொக்கிஷாதிபதி:—T. V. செல்லேயாமுதலியார், (merchant) நிர்வாகசபை:—1. S. கந்தையா முதலியார், 2. T. V. கந்தையா முதலியார், (station master) 3. K. முருகேச முதலியார் (Asst station master) 4 S. பொன்னம்பல முதலியார், 5 K. V, கந்தப்ப முதலியார், 6. S. S. கார்த்திகேசு முதலியார் 7. T. S. சண்முகமுதலியார், 8. A. வல்லிபுர முதலியார், 9. V. நடேச முதலியார், 10. K. வேலுப்பிள்ளே முதலியார்.

சங்கமேனேஜர்:—V. K. சின்னத்தம்பி முதலியார்.

# ...க்கருக்கு

## ...மபளம்

...மகாஜன சங்கத்தார் சென்னையி
...களிலும் கலாசாலைகளிலும் படிக்க
...ந்தப் பிள்ளைகளுக்கு இவ்வருஷம் முதல்
...ாடுத்துதவத் தீர்மானித்திருக்கின்றனர். சில
...ன்னமிட்டு ஆதரிக்கவும் யோசனை யுண்டு சங்
...யை நாடும் ஏழைச் செங்குந்தப்பிள்ளைகளின் பெற்
...துகாப்பாளரும் அடியில் கையொப்பமிட்டிருப்பவற்கு
... முதல் தேதிக்குள் மனு எழுதவேண்டும், மனுவில்
...பிட வேண்டியவை பிள்ளையின் பெயர், பிறந்த இடம், படிக்
... வகுப்பும் பள்ளிக்கூடமும், சென்ற பரீக்ஷையில் வாங்கிய மார்க்குகள், பெற்றோர் அல்லது பாது காப்பாளரின் பெயர், இருப்பிடம், உத்தியோகம், வருமானம் முதலியன, குடும்பத்திலுள்ள நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயமும், நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும், உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்களுமாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் இரண்டு கனவான்களுடைய சிபார்சு அவசியம் சிபார்சு செய்வரில் ஒருவர் செங்குந்தராக இருத்தல்வேண்டும்; சிபார்சு கடிதங்களையும் மனுவோடு சேர்த்து அனுப்புதல் வேண்டும். சங்கத்தின் தீர்மானம் ஜுலைமீ பதினைந்தாந்தேதிக்கு வெளியாகும்.

காரியதரிசிகள்:—தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

---

## கள்ளப்பிரசாரம்

ஒரு சிலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நமது செங்குந்த மித்திரன் பத்திரிகைக்கு உழைப்பதாகச் சொல்லி எளிய சனங்களிடம் வருஷ சந்தாவை வசூலித்து வருவதாகத் தெரியவருகிறது. இனி, செங்குந்த மித்திரன் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் பத்திரிகையின் பதிப்பாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் கைத்தீட்டுச் செய்த இரசீது பெற்றுக் கொண்டே சந்தாவை செலுத்தவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இரசீது பெற்றுக் கொள்ளாத சந்தாதாரர்கள் தொகைக்குச் செங்குந்த மித்திரன் பதிப்பாளர் உத்தரவாதியாக மாட்டார்.

ஆசிரியர்.

---

208435
சென்னை-600 003

# வேண்டுகோள்

நமது மித்திரன் சந்தாதாரர்களுக்கு இந்த நாலாவது சஞ்சிகையை வி. பி. (V. P.) தபால் மூலம் அனுப்பப்படுமென்றும், அதற்குமுன் நமது நேயர்கள் சிலர் சேர்ந்தாவது தனித் தனியாவது மணியாடர் மூலம் தொகையை அனுப்பிக்கொடுத்தால் இருதிறத்தாருக்கும் சௌகரியமாக இருக்குமென்றும், தெரிவித்திருந்தோம். அதன் பிறகு அனேக சந்தாதாரர்களிடமிருந்து மணியாடர் மூலம் பணம் வரப்பெற்றோம். வி. பி. மூலம் அனுப்பினால், சந்தாதாரர்களுக்கு இரண்டணா வீண் சிலவாகிறதென்பதை உத்தேசித்து இந்த (25-4-27) சித்திரை மாதத்துச் சஞ்சிகையையும், சாதாரணத்தபாலில் அனுப்பப்பட்டிருக்கிறது. சகோதரர்கள் தயவுசெய்து நமதுமித்திரன், மேன்மேலும் விருத்தியாக வேண்டுவதை முன்னிட்டு தங்கள் தங்கள் சந்தாத் தொகையை, மணியாடர் மூலம் முன்னாடியே அனுப்பிக் கொடுக்க வேண்டுகின்றோம்.

இப் பத்திரிகை நமது குல முன்னேற்றம் கருதி, வெளி வருவதால் செங்குந்த குலத்தில் வந்த ஒவ்வொரு சகோதரரும் இப் பத்திரிகைக்கு உடனே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து இப் பத்திரிகையை ஆதரித்து வர வேண்டுமென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

முதலிரண்டு சஞ்சிகைகளைப் பெற்ற நமது சகோதரர்களிற் சிலர், மூன்றாவது சஞ்சிகையை வேண்டாமென்றும், சிலர் மூன்றாவது சஞ்சிகையைப் பெற்று, அதிலிருந்த தொண்டு பிரசுரத்தைக் கண்ணுற்றபின், தங்களுக்குப் பத்திரிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும், நமக்குக் கடித மூலம் தெரிவித்துள்ளார்கள்; எக்காரணம்பற்றி அவர்கள் எழுதினாரென்பது நாமறியோம். ஆனால், இப்பத்திரிகை, பொருள் வருவாயை உத்தேசித்து வெளிப்படுத்தியதல்லவென்பதை மட்டும் நாம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திரிகை வேண்டாமென்று நினைக்கும் நமது சகோதரர்கள் முதற் சஞ்சிகையைப் பெற்ற உடனே, பத்திரிகை வேண்டுவதில்லையென்றாவது, முதற்சஞ்சிகையைத் திருப்பியாவது அனுப்பியிருந்தால், இருபாலாருக்கும் சிரமமில்லாதிருந்திருக்குமென்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

இந்த அக்ஷய ஆண்டு தைத் திங்களிற் பிறந்துள்ள நமது மித்திரன், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரால் வளர்க்கப்பட்டு வருகிறபடியால் நீடூழி நிலவி வருவானென்பதை ஒவ்வொரு செங்குந்த குல மக்களும் அறிய வேண்டுகின்றோம்.

**T. N. சபாபதி முதலியார்,**

மானேஜர்:—"செங்குந்த மித்திரன்" ஆபீஸ், சென்னை.

உ

# தென்னிந்திய
# செங்குந்த மகாஜன சங்கம்
## சென்னை

"சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்."

அன்புடையீர்!

நிகழும் பிரபவ௵ சித்திரைமீ 17உ (29-4-27) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குமேல் இச்சங்கத்தின் கூட்டம், சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலிருக்கும் சௌந்தரிய மஹாலில் நடைபெறும். தாங்கள் மற்றைய அன்பர்களோடும் தங்கள் சபையினரோடும் வந்திருந்து கௌரவிக்கும்படி வேண்டுகின்றனர்.

இங்ஙனம்,

தி. நா. சபாபதி முதலியார்,

காரியதரிசி.

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE, MADRAS.

எவ்வளவோ தடங்கல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் முணுமுணுத்தாலுஞ், சரி கோபங்கொண்டாலுஞ் சரி ஏதேனுங் காரியத்திற் பிரயோஜனமுண்டா? இத் தடங்கல்களெல்லாம் தீர்க்காலோசனை யென்பதற்குப் பயந்துவிடும். ஆகையால் தீர்க்காலோசனையே இன்றியமையாக் காரியம்.

தீர்க்காலோசனை செய்து ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தாலும் போதாது. கண்ணில் மை யிட்டு எவ்விதம் பொதுமகள் மயக்குகிறாளோ அதுபோலவே வியாபாரிகளுக்கு ஒரு மை வேண்டும். இந்த மைக்கே பொறுமை எனப்படும். இந்த மை யில்லாவிடில் வியாபாரத்தை யொருவன் செய்துகொள்ளமாட்டான். "மாதர்க்கணிகலம் எதிர்பேசாதிருத்தல்" அதுபோல வர்த்தகர்களுக்கு அணிகலம் சாந்தகுணமே "பொறுமை பெருமை தரும்" என்பது உண்மை. "உலகம் பலவிதம்" ஆகையால் நம்மிடம் வியாபாரம் செய்ய வருபவர்கள் பலவினத்தாராக இருக்கக் கூடும். கோபக்காரர்களும், சண்டைக்காரர்களும், துஷ்டர்களும், போக்கிரிகளும், சாதுக்களுமாக பலதினுசா யிருப்பார்கள். நாம் அவர்கள் எல்லோரிடத்திலும் ஒருமாதிரியாகத்தான் பொறுமையுடன் பேசவேண்டும். வியாபாரஞ்செய்ய வருபவர்களிடம் நல்ல மிருதுவானபேச்சுப்பேசுவதினால் அவர்களுக்கு நம்மிடம் ஒருவிதமான நல்ல அபிப்பிராயம் உண்டாகின்றது. அந்த நல்ல அபிப்பிராயம் நாம் வியாபாரஞ்செய்யும் சரக்குகளிடம் சுலபமாக மாறும். நல்ல மொழிகளினால் எப்படிப்பட்டவர்களையும் சிநேகமாக்கிக் கைவசப்படுத்திக் கொள்ளலாம். துஷ்டர்கள் நமக்குக் கோபத்தையுண்டாக்கும்படியான பேச்சுப் பேசுவார்கள். அப்படிப்பேசினபோதிலும் நாம் பொறுமையாய்ப் பதில் சொல்லுவோமாயின் அவர்கள் வெட்கிப்போவதுடன் பக்கத்தில் நிற்பவர்களுக்கும் நம்மிடத்தில் ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டாகும்,—

"இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்பது திருக்குறள்

நாம் துஷ்டர்களோடுசண்டை போடுவோமாயின் வியாபாரஞ் செய்ய வந்து நிற்பவர்கள் சண்டை யோய்கிறவரையிற் காத்திருக்கக் கூடாதவர்களாய் வேறிடத்திற்குப் போய்விடுவார்கள். நம்



கடைக்கு மறுபடி வரமாட்டார்கள். ஒன்றோடுகூட இரண்டுமூன்று விற்பனை யிழக்கும்படி நேரிடுகிறது. சிலருக்கு மலிவாகக் கொடுத்தாலும் அவர்கள் மனத்திற்குச் சமாதானப் படுகிறதில்லை. சும்மா கொடுத்தாலுங்கூடக் குற்றங் கண்டு பிடிப்பார்கள். இது மனித வியற்கை யென்றெண்ணி நாம் கோபங்காட்டாமற் புன்சிரிப்புக் கொண்டே பேசவேண்டும். ஜனங்களுடைய சுபாவ மறிந்து எவரெவரிடம் எந்தெந்தமாதிரி நடக்கவேண்டுமோ அவ்விதமே நடக்க வேண்டும். சிலர் அதிகமாய்ப் பேசுவதிற் பிரியமுடையவர்களாக இருப்பார்கள். சிலருக்கு அதிகப் பேச்சுப் பிடிக்கிறதில்லை. சரக்கு நன்றாயிருத்தல் மாத்திரம் போதாது. நமது நடத்தை, குணம், நமது கடையிலிருக்கும் சரக்கு ஆகிய இவைகளெல்லாம் ஜனங்களையிழுப்பதில் பிரயோஜனம் உள்ளவைகளாயிருக்கவேண்டும். வியாபாரிகளுக்கு ஜனங்கள் அதிகமாய் வரவேண்டும் என்ற நோக்கத்தைவிட மேலான நோக்கம் யாது? ஆகையால் மேலே கூறியவைகளைச் சற்று நன்றாய்க் கவனிக்கவேண்டும். வியாபாரிகளுக்கு முகமலர்ச்சி யவசியமாக வேண்டும், வியாபாரியைப் பார்த்த வுடனேயே இவர் நல்லவர் என்பது தோன்றவேண்டும். இவ்விதமிருந்தாற்றான் வியாபாரம் விர்த்தியாகும். இதனாற் புகழுமுண்டு.

ஒரு தொழிலை யாரம்பித்து மிக்கப் பொறுமையோடு வியாபாரத்தை நடத்தினாலும் போதாது. ஊக்கமும் விடா முயற்சியும் அவசியம் வேண்டும். (Perseverence is the Secret of Success.) ஒரு தொழிலை யாரம்பித்துவிட்டு அதில் லாபமில்லையென்று நினைத்து மற்றொரு தொழிலுக்கு முயற்சிப்பது தகாத காரியம். எந்தத் தொழிலிலும் வைராக்கியமே சித்தி பெறும். ஒருவன் வெற்றிலைப்பாக்குக்கடை வைக்கிறான். அதில் லாபமில்லையென்று அரிசிக்கடை வைக்கிறான், ஆகவே "பல மரங்கண்டவன் ஒரு மரமும் வெட்டான்" "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்ற பழமொழிக்கிணங்க இரண்டிலும் லாபமில்லாமலேயாகும். லாபம் கிடைத்தாலும் நஷ்டம்வந்தாலும் பொருத்து ஒரு தொழிலை விருத்திக்குக் கொண்டுவரவேண்டும்.

நம்மவரில் அநேகம்பேர் நல்லகாலம் எப்போது வரும் என்று காத்துக்கொண்டு ஒரு தொழிலையும் ஆரம்பிக்காமல் இருப்பதைக்

கண்டும் கேட்டும் இருக்கிறோம். இவ்விதம் பார்ப்பது அனாவசியம். ஏனெனில் முயற்சியும் ஊக்கமும் உள்ளவனுக்கே நல்ல காலம் வரும் என்பது தெள்ளிதிற் புலப்படும். ஒரு மாணாக்கன் தன் பரீட்சை விஷயத்தைப்பற்றி ஒரு ஜோதிடம் பார்க்கின்றான். ஜோதிடரும் ஏதோவொரு கணிதத்தால் ஜெயிக்குமென்று சொல்லுகிறார். அவ்விதஞ் சொன்னதினால் படிக்காமலிருந்துவிடலாமா? படியாமலிருந்தால் ஜோதிடர் சொன்னது பொய்க்குமென்பது திண்ணம். ஒருவர் "விதிவிதியென்போரை மதியிலார் என்று சொல்லவேண்டும்" என்கிறார். ஆகையால் ஒருவனுக்கு வேண்டுவன ஊக்கமும், மனோதைரியமும், விடா முயற்சியுமே.—

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி
மெய்வருந்தக் கூலிதரும்" திருக்குறள்

இவ்வித ஆன்றோர் மொழிகளை நன்கு நம் மனதிற் பதியவைத்து ஊக்கத்தோடு வேலைசெய்யவேண்டும் ("To-morrow never comes") என்ற ஆங்கிலப் பழமொழிப்படி நாளை நாளை யென்று சொல்லாது உடனே செய்ய முயல வேண்டும். ஒரு விஷயத்தை ஒருவர் புகழ்வர். மற்றொருவர் இகழ்வர். ஒருவருக்கு இனிமையாயிருக்கும். மற்றொருவருக்குக் கசக்கும். இதனால் ஒருவருடைய சொல்லையுங் கவனியாது தன் சிரத்தையிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும்.

வியாபாரத்தை ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் செய்தால் மாத்திரம் போதாது. ஆனால் வியாபாரத்தில் நம்பிக்கை ஒற்றுமை, கூட்டுறவு இன்றியமையாக் காரியங்கள். நம்பிக்கை என்பது உயர்ந்த பொருள். அதைச் சம்பாதித்தவன்தான் வியாபாரி. நம்பிக்கை யற்றவனிடத்தில் எவ்வளவு செல்வமிருக்கினும் பயனில்லை. நம்பிக்கை என்னும் நாணயமுள்ளவன் எளியனாயினும் செல்வவானே. ஜனங்களுடைய வறுமை என்னும் பிணியை நம்பிக்கை என்னும் ஔஷதந்தான் போக்கும். வர்த்தகம் நீடித்து நடப்பதற்கும் பெருகுவதற்கும் நம்பிக்கை என்பது அடிப்படை, ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் நம்பிக்கை அவசியமானது. கொடுத்தவனுக்கு தன்னுடைய பணம் போகாது என்று நம்பிக்கை யிருத்தல் வேண்டும். எப்படியாயினும் பணத்தை வாங்கினவன் கொடுத்தவனுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி



நடக்கவேண்டும். இதுதான் பரஸ்பர நம்பிக்கை. சிலர் அயலார் பொருள் சிக்கினவுடன் நம்பிக்கை யென்னும் நாணயத்தை மறந்துவிடுகின்றனர். இவ்விதம் நம்பிக்கைத் துரோகஞ் செய்வது வீழா நரகத்தில் வீழ்த்துமென்பதிற் றடையில்லை. இந் நம்பிக்கையே ஒற்றுமையையும் கூட்டுறவையும் உண்டாக்கும். மேல் நாட்டார் வியாபாரத்தில் விருத்தியடைந்தது கல்வியினாலேயும் கூட்டுறவினாலேயுமே. நாமும் அவ்விதக் கூட்டுறவை யடைந்தால் ஏன் முன்னிலைமையை யடையக்கூடாது. இத் தேசத்தார் முன்னுக்கு வர கவர்ன்மெண்டார் உதவி வேண்டியதில்லை. வேண்டிய இன்றியமையாக் காரியங்கள் மூன்று. அவையாவன கல்வி, நம்பிக்கை கூட்டுறவு. நம் இந்தியர்களின் குறைவு இம் மூன்றிலும் அடங்கி யிருக்கின்றது. நமது காருண்ய சக்ரவர்த்தியார் டில்லி தர்பாரிலும் பிறவிடங்களிலும் இவைகளைப்பற்றி நன்கு பேசி யிருக்கின்றனர். இவைகளை யடைவதற்கே நாம் முயலவேண்டும்.

சிலர் ஜாதி மத வேறுபாட்டினாலே இத் தேசத்திற் கூட்டுறவு கைகூடவில்லை யென்று சொல்லுகின்றனர். ஜாதி மதம் என்பனவைகளை அவரவர் தங்கள் வரையில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜாதி மத விரோதம் பெருந் தீங்கைத் தரும். ஒருவருக்கொருவர் மதங்களைப்பற்றித் தூஷிப்பது கெட்ட வழக்கம். எந்த மதத்திலும் உண்மையுண்டு. ஆகையால் அன்னிய மதங்களைத் தூஷியாது கூட்டுறவைச் சம்பாதித்து வர்த்தகஞ் செய்ய முயல்வது புத்திசாலித்தனம்.

வியாபாரத்தைப் பொறுமையோடும் ஊக்கத்தோடும் செய்தால் மாத்திரம் போதாது. ஆனால் விற்பனைச் சாமர்த்தியம் வேண்டும். வெளுத்ததெல்லாம் பாலாகாது. அதுபோல எல்லா வியாபாரிகளும் விற்பதில் திறமையுடையவர்களாயிரார்கள். அத்திறமை சிலருக்கு மாத்திரமேயுண்டு. விற்பனை செய்வதில் கெட்டிக்காரனாக வேண்டுமாயின் அதையும் ஒரு வித்தையாக எண்ண வேண்டும். இதைப்பற்றி யறியவேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. இருந்தாலும் ஜனங்கள் தங்களுக்குத் தெரியுமென்று சொல்வதெல்லாம் சொற்பந்தான். விரிவாக எடுத்துச் சொல்வதுங் கஷ்டந்தான்.

சில சமயங்களில் வியாபாரிகள் வந்தவர்கள் நோக்கம் பார்த்துப் புதுமாதிரியான வழியில் செல்லவேண்டி வருகிறது. வியாபாரம் ஒரு வித்தையென்று சொல்லப்பட்டுளது. அஃதாவது வந்தவர்களை வெறுங்கையோடு போகும்படி சம்மதியாமல், அவர்களைத் தன்னிடம் ஏதேனும் வாங்கச் செய்து போகச் சொல்லும் வல்லமையே. சிலபேர்கள் யாதொரு தூண்டுகோலும் இல்லாமல் கடைக்குவந்தால் வந்தசுவடு தெரியாமலே வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். இவர்களிடத்தில் வியாபாரிகளுக்குத் தொந்தரவேயில்லை. ஒருவர் ஒரு கடையில்வந்து வியாபாரங் கொள்ளவந்தால் அன்றோடு போகாமல் மறுபடியும் அதே கடைக்குவந்து சாமானை வாங்கச்செய்வது வியாபாரியின் சாமர்த்தியம். விற்பனை செய்வதில் வேறொரு தந்திரமும் வேண்டும். இதை விசேஷமாய் கடைகளுக்கு சாமான் வாங்கும் உத்தேசமில்லாமலே வரும் ஜனங்களிடத்தில் உபயோகிக்கவேண்டும். அதென்னவென்றால், கடைக்கு வருபவர்களை சாமான் வாங்கும்படி அவர்கள் மனதில் ஒரு எண்ணத்தை உண்டுபண்ணுவதும், அந்த எண்ணம் அவர்கள் மனதிற் பதிந்து விட்டது என்று தெரிந்ததும், சாமானை வாங்கத்தான் வேண்டுமென்று அவர்களுக்குள் ஒருவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளச் செய்வதும், அபிப்பிராயம் கொண்ட பிற்பாடு வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்கும்படி செயவதுமே யாகும்.

ஒரு சில்லரை வியாபாரி ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் சுருட்டு பழம் முதலான சில்லரை சாமான்கள் விற்றுக்கொண்டிருந்தான். அவன் கடைக்குப் பக்கத்தில் இன்னும் நாலைந்து கடைகள் இருந்தன. பக்கத்துக் கடைகளைவிடத் தன் கடையில் வியாபாரம் அதிகமாய் நடக்க ஒரு யுக்தி தேடினான். அந்த ஸ்டேஷனுக்கு அநேகர் பைசிக்கிளில் ஏறிவருவது வழக்கம். வாடகைக்கு இடந்தேடி சைக்கிளை வைத்துவந்தார்கள். இந்தக் கடைக்காரன் சைக்கிளைத் தன் கடைக்குப் பின்புறத்தில் சும்மா வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டான். அவர்கள் சிநேகம் இவனுக்குக் கிடைத்ததும் அவர்கள் சுருட்டு முதலானவை வாங்கத் தலைப்பட்டார்கள். கொஞ்சகாலங் கழித்துப் பக்கத்தில் காப்பிக்கடை ஏற்படுத்தினான். காப்பிக் குடிக்கும் அபிப்பிராயமுள்ள



சிநேகிதர்கள் அந்தக் கடையில் வாங்க ஆரம்பித்தார்கள். பிறகு அதற்குப் பக்கத்தில் டென்னிஸ், கிரிக்கட் முதலான பந்து விளையாடுவதற்கு வேண்டிய பாட், பந்து முதலான கருவிகளை விற்கும் கடையொன்று ஏற்படுத்தினான். இவ்விதமாகச் சிறுகச் சிறுக வியாபாரத்தைத் தன் சாமர்த்தியத்தால் விருத்தி செய்தான். ஆகையால் வியாபாரிகளுக்கு விற்பனைச் சாமர்த்தியம் அவசியம் வேண்டும்.

எவ்வளவுதான் சாமர்த்திய மிருந்தபோதிலும், நம்பிக்கையுள்ள வேலைக்காரர்கள் இல்லாவிடில் அக்கடையில்வரும் பிரயோஜனம் யாது? ஆகையால் வியாபாரிகள் கவனிக்கவேண்டியது நம்பிக்கையும் நற்குணமுமுள்ள வேலைக்காரர்களைத் தெரிந்தெடுப்பதே. ஒருவர் தெரிந்தெடுக்கிற வேலைக்காரர்கள் நற்குணம் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களா என்பதை ஆராய்ந்தறியவேண்டும். வேலைக்காரர்கள் நம்பிக்கையா யிருந்தால்மட்டிலுந்தான் வியாபாரம் ஒழுங்காய் நடக்கும். அவ்விதமில்லாவிடில் சொந்தக்காரர் வியாபாரத்தில் நோக்கமுடையவராக விருப்பர். ஆனால் வேலைக்காரர்களோ களவு செய்கின்றார்கள். இஃதவருக்குத் தெரியாது. ஆண்டாண்டு தோறும் கணக்குப் பார்த்தால் வியாபாரத்தில் நஷ்டமேயொழிய வேறில்லை. இவர் நினைப்பது வியாபாரம் சரியாய் நடக்கவில்லை யென்பது. கடைசியில் அவர் தன் தலைமேல் கைவைக்கும்படியாக இந்த வேலைக்காரர்கள் செய்வார்கள். இவ்விதம் அநேக இடங்களில் நடக்கின்றன. ஆகையால் நம்பிக்கையான வேலைக்காரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களிடத்திலும் நம்பிக்கையா யிருக்கவேண்டும். வேலைக்காரர்களை நமக்கு அடிமையென்று கருதலாகாது. அவர்களை நம் சிநேகிதர்களென்று கருதவேண்டும். ஒரு இயந்திரத்திற்கு சிறு சாமான்கள் எவ்விதம் அவசியமோ அவ்விதமே ஒரு வியாபாரிக்கும் வேலைக்காரர்கள் அவசியம். ஒரு வியாபாரி நஷ்டமடைவதும் லாபம் அடைவதும் வேலைக்காரர்களாலேயே. நமக்கு அதிக வேலைக்காரர்கள் இருக்கிறார்களென்று கர்வங் கொள்ளலாகாது. அவர்கள் குற்றஞ் செய்தால் தன் சகோதரர்கள் குற்றஞ் செய்ததாக எண்ணி மென்மொழியால் அவர்களுக்கு நற்புத்தி கூறவேண்டும். மேலும், வேலைக்காரர்களுக்குத் தகுந்த சம்பளங் கொடுக்க

வேண்டும். அவ்விதமில்லாவிடில் எவ்விதமாவது திருட எத்தனம் பண்ணுவார்கள். வேலைக்காரர்கள் ஒழுங்காகவும் மரியாதையாகவும் இருந்தாற்றான் வியாபாரங்களில் தக்க லாபங் கிடைக்கும். வேலைக்காரர்கள் வியாபாரங்களுக்குப் பிரதிநிதி. ஆகையால் வேலைக்காரர்களை நம்பவேண்டும். எவரெவர் எதெதில் சாமர்த்தியமுள்ளவரா யிருக்கின்றாரோ அததில் வேலை கொடுக்கவேண்டும். ஒரு வேலைக்காரன் தன் எஜமானனைவிட சாமர்த்தியவானாக யிருந்தால் அவனைக் கண்டு பொறாமை கொள்ளாது அவனுக்கு ஊக்கங்கொடுக்கவேண்டும்.

விற்பனைச் சாமர்த்தியமிருந்தாலும் போதாது. வியாபாரிக்கு கறார் விலை அவசியம் வேண்டும். கறார் விலை யென்றால் ஒரே விலை (Fixed Price.) ஒரே விலைக்கும் பல விலைக்கும் மெத்த வித்தியாசமுண்டு. இதை நமது நாட்டு வர்த்தகர்கள் அறியாதிருப்பது நம்மவர்த்தகர்களின் பெருங் குறைவு. ஒரே விலை வைத்து வியாபாரஞ் செய்வதால் உண்டாகும் பயனை அவர்கள் தெரிந்தார்களில்லை. பல விலை சொல்வதால், வந்தவர்களுக்கு வியாபாரியின்பேரில் அவநம்பிக்கை யுண்டாகிறது. அதனால் வியாபாரங் கெட்டு வரும். ஒரே விலை வைத்து விபாபாரத்தில் கோடிக் கணக்கான திரவியஞ் சம்பாதித்தவர்கள் அநேகர். ஒரே விலையென்று சொன்னால் மாத்திரம் போதாது, பக்கத்துக் கடையைவிடக் கூடுதலாகவு மிருக்கக்கூடாது. அவ்விதங் கூடுதலாகவிருந்தால் கறார் விலை செல்லாது. ஒருவர் கறார் விலைக் கடையில் சாமான் எடுத்து அயற்கடையில் விசாரிக்கும்போது கூடுதலாக இருக்குமாயின் திரும்ப அக் கடைக்குப் போகார்கள். இது கறார் விலையாகாது. கறார் விலை என்றால் பக்கத்துக் கடைக்குச் சமானமாகவாவது இருக்கவேண்டும். அவ்வித மிருக்குமாயின் அவர்பேர் எங்கும் விளங்கி மற்றக் கடையைவிட அவர் கடையில் அதிக சாமான் செலவாகும். ஆகையால் ஒரே விலை வைத்து நடத்துவதில் ஒரு குற்றமுமில்லை. கறார் விலையென்று சொல்லி ஒரு ரூபாய்க்கு அரையணா தள்ளு படியென்பதும் கறார்விலை யாகுமா? ஆகையால் கறார் விலை கறாராகவே யிருக்கவேண்டும். சிலர் ஒரு அணா பெறுமானதை ஒரு ரூபா சொல்லி “உங்களுக்கு இஷ்டமானால் ஒரு காசுக்கு கேளுங்கள் சம்மதம்” என்று சொல்லு